விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-7546)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 23 திங்கட்கிழமை (09.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 264

## எழுக தமிழ் எழுச்சிப் பேரணி
## உலகத்தின் கவனத்தை ஈர்த்து வெற்றி பெறும்

### தமிழக திரைப்பட நடிகர் சங்கம் சார்பில் நடிகர் கருணாஸ் அறிக்கை



(சென்னை)
செப்ரெம்பர் 16 இல், தமிழ் மக்கள் பேரவை ஒருங்கிணைக்கும் "எழுக தமிழ்" பேரணி அறவழியான அதிர்வலையை உலகெங்கும் வாழும் இனப்பற்றாளர்களுக்கு எடுத்துரைக்கும் போராட்ட வடிவம்.

இவ்வாறு தமிழக திரைப்பட நடிகர் சங்கம் தனது பேராதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழக 23

## ஆனையிறவு சோதனைச் சாவடி அகற்றம்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு சோதனைச் சாவடி நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தற்காலிகமாக அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் சோதனைச் 23

## தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காகவே யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம்

### கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)
மக்கள் எம் மீது சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நாம் எதிர்காலத்தில் உருவாக்கும் அரசாங்கத்தில் மக்களின் உரிமைகளை பாதுகாக்க முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணி



23

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஆளுநருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வேந்தர் மற்றும் துணை வேந்தர் நியமனத்தை ஜனாதிபதி ஊடாக விரைந்து நடைமுறைப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநரிடம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன் 23

## அமைச்சர் சஜித் வடக்குக்கு இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)
ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதற்கமைய அவர் 23

## தமிழர்கள் அநுரகுமாரவை ஆதரித்தால்
# வட - கிழக்கு இணைப்புடன் சுயநிர்ணய உரிமை!
## தேசிய மக்கள் சக்தி யாழில் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்) வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு முன்வைக்கப்படும் என்றும் தேசிய மக்கள் சக்தி இயக்கம் தெரிவித்துள்ளது. இதற்காக ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது.** (23ஆம் பக்கம் பார்க்க)

## 4,286 பேருக்கு ஆசிரியர் நியமனம்
### நேற்று வழங்கி வைப்பு

(கொழும்பு)
தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகள் 4,286 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் வைபவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக 23

## மாகாண சபைகளின் அதிகாரங்களை அதிகரிக்க வேண்டும் - ரணில்

(யாழ்ப்பாணம்)
மாகாண சபைகளிடம் இருக்கும் அதிகாரங்களை மேலும் அதிகரிக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரத்தை பரவலாக்குவதன் மூலம் அந்த அதிகாரங்களை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் எண்டர் பிரைசஸ் ஸ்ரீலங்கா கண்காட்சி நேற்று 23

## நவாலியில் வீடு புகுந்து வன்முறைக் கும்பல் நேற்று அடாவடி

(யாழ்ப்பாணம்)
நவாலி அட்டகிரி பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல், 23

## வீட்டிலிருந்து வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
அனலைதீவுப் பகுதியிலிருந்து வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் 23

### என்ரபிறைஸ் வேலைத்திட்டத்தின் கீழ்
## ரூ.15 லட்சம்வரை பிணையின்றி இலகு கடன்களை பெறலாம்
### யாழில் மங்கள் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)
என்ரபிறைஸ் ஸ்ரீலங்கா தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 23

### பூநகரிப் பகுதியில்
## குளத்தில் மூழ்கிய குடும்பம் மீட்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி பூநகரி பகுதியில் குளத்தில் மூழ்கிய குடும்பமொன்றை அந்த பகுதியிலுள்ள இராணு 23

### பிணை முறி மோசடியுடன்
## தொடர்புடையவர்கள் நீதிமன்றம் செல்வது உறுதி - மகிந்த

(கொழும்பு)
மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய அனைவரும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த 23

**SPOKEN ENGLISH**

கள பயிற்சியுடன் கூடிய 3 மாதக்கற்கைநெறி

இம்முறை A/L எழுதிய மாணவர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கான புதியபிரிவுகள் ஆரம்பம்

3 மாத சனி, ஞாயிறு பிரிவு - பதிவுகள் 13.09.2019 வரை

1.காலை 08-10 2.காலை 10-12 3. மதியம் 01-03 4.மாலை 03-05

அனுமதி, புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்

ஒவ்வொருபிரிவிலும் 16 பேர் மட்டும் - ஆகக்குறைந்த வயதெல்லை 16

தொலைபேசி மூலமும் பதிவுகளை மேற்கொள்ளமுடியும்

SAAMSON இங்கிலீஸ்வேக் சொப்

403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.

077 621 4567
021 222 4282


# எழுக தமிழ் நிகழ்விற்கு நெல்லியடி வர்த்தக சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 16 ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெறவுள்ள எழுக தமிழ் மக்கள் எழுச்சிப் பேரணிக்கு நெல்லியடி வர்த்தகசங்கம் பூரண ஆதரவை வழங்குவதாகச் சங்கத்தின் செயலாளர் இ.சுரேஸ்றஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இழைக்கப்பட்டு வருகின்ற அநீதிகளுக்கு எதிராகச் சர்வதேசத்தின் பார்வையைத்திருப்பும் நோக்குடன் இந் நிகழ்வு வலுப்பெற வேண்டும்.

இந் நிகழ்விற்கு கட்சி பேதங்களைப் புறந்தள்ளிவிட்டு அனைவரும் ஓரணியில் திரள்வதன் மூலம் தமிழ் மக்களின் வலுவான கோரிக்கையை சர்வதேசத்தின் முன் பாரப்படுத்த அனைவரையும் எதிர்வரும் திங்கட்கிழமை இடம் பெறும் எழுக தமிழ் மக்கள் எழுச்சிப் பேரணிக்கு அணிதிரளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-10,60)

# புலிகள் அழிக்கப்பட்ட நாளே என் வாழ்வின் முக்கியமான நாள்


## கோத்தாவின் நிகழ்வில் முரளிதரன் தம்பட்டம்

(கொழும்பு)

2009இல் யுத்தம் முடிவிற்கு வந்த, விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட நாளே எனது வாழ்வில் முக்கியமான நாள். சமாதான பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகளிற்கு நல்ல வாய்ப்புக்கள் வந்தன. ஆனால் அவர்கள் மக்களை கொன்றார்கள்.

இப்படி தெரிவித்துள்ளார் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன்.

கோத்தபாய ராஜபக்ஷவிற்கு ஆதரவான வியத்கம அமைப்பின் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இப்படி தெரிவித்தார்.



கிரிக்கெட் வீரர்களோ, ஏனைய துறைசார் வல்லுநர்களோ நாட்டிற்கு தலைமை தாங்க முடியாது. இலங்கையில் சிலர் வர்த்தகர்கள் மீதும் ஏனையவர்கள் மீதும் நம்பிக்கை வைக்கின்றனர், ஆனால் மக்களின் பிரச்சினைகளை அரசியல் அனுபவம் உள்ள அரசியல் ரீதியில் முடிவெடுக்க கூடிய ஒருவராலேயே தீர்க்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சில விடயங்களை சாதித்த, மக்களை பாதுகாக்ககூடிய ஒருவரிற்கு மக்கள் வாக்களிக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஞா)


# கண்ணீர் அஞ்சலி

அமரர் ஈஸ்வரி பஞ்சாட்சரம்

(ஓய்வுநிலை ஆசிரியை – உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்)



யா/ உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய அதிபர் திருமதி வாசுகி மன்மதராசா அவர்களின் அன்புத் தாயார் ஈஸ்வரி பஞ்சாட்சரம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள் சங்கமும் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் கோப்பாய்க் கல்விக்கோட்டம்.

(131)



# மரண அறிவித்தல்

திருமதி திலகவதி விஸ்வநாதன்



பிறப்பு : 08.08.1934 இறப்பு : 07.09.2019

யாழ்.வேலணை மேற்கு சிற்பனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திலகவதி விஸ்வநாதன் கடந்த (07.09.2019) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற விஸ்வநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ராசாத்தி மற்றும் யோகநாதன் (லண்டன்), லலிதா (கொழும்பு), செல்வநாதன் (லண்டன்), வாசுகி (கொழும்பு), ரகுநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயகுமாரி, பாலசூரியன், (தியாகராசா ஸ்ரோர்ஸ் - காலி), தயாநிதி, லயன் கங்கை வேணியன் JP (வேணி களஞ்சியம் - யாழ்ப்பாணம்), நிசாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், கோமேதகவள்ளி மற்றும் தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் குகனேஸ்வரி, இராசலட்சுமி, மோர்கனதாஸ், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான சரசு, வேலாயுதம், பாலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சிவசரணம், கனகரெட்ணம் மற்றும் சரவணபவாநந்தன், ரதி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், பிரியந், சுகந், பானுரேகா - சபேசன், பிரியா - சுரேன், சுதர்சன், திவ்யா - நிஷாந், சுகந்தன், மயூரன், மதுரன், பிரசாந்தி - ரமேஷ், சுகந்தி, கோகுலா, இராகவி, ஆருஜன், ஆருதி ஆகியோரின் பேர்த்தியும், வருண், சங்கவி, பிரவிந், வாகினி ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.09.2019) செவ்வாய்க்கிழமை அன்னாரின் யாழ்ப்பாணம், இல.10, இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணிக்கு வேலணை மேற்கு அம்பலவி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.10,
இந்துமகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

(C-7549)

தகவல் - குடும்பத்தினர்
பாலசூரியன் - 077 742 1549
கங்கை வேணியன் - 077 161 1865



# பணியாளர் தேவை

சாவகச்சேரியில் இயங்கி வரும் கல்லரிவு ஆலை ஒன்றுக்கு மெசின் கல்லு அரிவதற்குரிய வேலையாள் தேவை. பைக்கற் ஒன்றுக்கு 500/= கூலி வழங்கப்படும். தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். தங்கி நின்று வேலை செய்வோர் விரும்பத்தக்கது.

(C-7550)

T.P :- 0779400963



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாலகிருஷ்ணன் திலகானந்தம்



கொழும்பு தாமரைத் தடாகத்தில் 02.09.2019 அன்று நடைபெற்ற கலைஞர்களுக்கான அரச விருது வழங்கும் விழாவில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த சைவப்புலவர் **பாலகிருஷ்ணன் திலகானந்தம்** அவர்களுக்கு இலக்கியத் துறைக்காக **"கலைச்சுடர்"** விருது வழங்கப்பட்டமையை இட்டுப் பெரும் மகிழ்ச்சியடைவதோடு அவரை நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :-
சகோதரன் -
சோமசுந்தரம் சிவானந்தம்
(மோகன்)

கச்சாய் வீதி, கொடிகாமம்.

(092)

## எழுக தமிழுக்கு தமிழகத்தில் பேராதரவு

# சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக தமிழர் ஒன்றுபட வேண்டிய தருணம்

## கொளத்தூர்மணி அழைப்பு

(சென்னை)

**பிராந்திய அரசுகளையும் வல்லரசுகளையும் துணைகொண்டு இன அழிப்பு வேலைகளை முடுக்கி முன்னேறும் சிங்களப் பௌத்த பேரினவாதத்திற்கு எதிராய் தமிழர் ஒன்றுபட்டாக வேண்டிய தருணமிது எனத்தெரிவித்த ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவருமான கொளத்தூர் தா.செ.மணி, எழுக தமிழ் பேரணியின் மக்கள் திரட்சியும் அது எழுப்பவிருக்கும் முழக்கமும் நடந்து செல்லும் போது கிளம்பும் புழுதியும் இந்தியப் பெருங்கடலை வட்டமிடும் வல்லரசுகளுக்கிடையில் வாழ்வுநடத்தும் சிங்களப் பௌத்தப் பேரினவாதத்தின் தூக்கம் கெடுக்கட்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணி வெல்லட்டும்.

முள்ளிவாய்க்கால் பேரழிவு நிகழ்ந்து ஆண்டுகள் பத்து உருண்டோடிவிட்டன. முள்ளிவாய்க்காலோடு எல்லாம் முடிந்துவிட்டது என்று எண்ணியவர்கள் ஏமாந்து போயினர். சாட்சிகளற்ற போரை நடத்தி முடித்ததாக இறுமாந்து இருந்த சிங்கள பௌத்த பேரினவாதிகள் உலகை உலுக்கிய சாட்சிகளால் திக்குமுக்காடிப் போயினர். ஐ.நாவில் பாராட்டுப் பத்திரம் வாசிக்கக் கண்டவர்கள் பொறுப்புக்கூறலுக்காகப் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆயினும் அரசு என்ற அடிப்படை வலிமையோடு தமது நீண்ட நெடிய இராஜதந்திர முதிர்ச்சியோடு உலக மன்றத்தில் நீதியைத் தள்ளிப் போடுவதன் மூலமாகவே நீதியின் மூச்சை நிறுத்திவிடலாம் என்று எண்ணி இருக்கின்றனர்.

கண் துடைப்புக்காக காணாமல்போனோர் அலுவலகம், பேச்சளவில் அரசியல் தீர்வு வாக்குறுதிகள், நல்லாட்சி, நல்லரசாங்கம், நல்லிணக்கம் என வண்ண வண்ணப் பூச்சுகளெல்லாம் கரைந்தோடக் காண்கிறோம்.

பேரினவாதத்தின் வீரநாயகர்களான ராஜபக்ஷ குடும்பம் பெரும் சக்தியாக எழுந்துவரக் கண்டது உலகம். பிராந்திய வல்லரசும் உலக வல்லரசுகளும் ஏற்படுத்திய ரணில்- மைத்திரி கூட்டணி பேரினவாதச் சூட்டில் நொறுங்கி போனது. ஆட்சிக் கவிழ்ப்பு, பிரதமர் மாற்றம் என அதிரடிகள் அரங்கேறி உலக சட்டங்கள் மட்டுமல்ல உள்ளூர் சட்டங்களையே மதிக்காதவர்கள் என்று தம்மைத் தாம் அம்பலப்படுத்திக் கொண்டது சிங்கள பௌத்த பேரினவாதம். 'ஐ.நா. விடம் பொறுப்புக்கூற வேண்டியதில்லை, எங்கள் வழியில் நாங்கள் எதையும் செய்து கொள்வோம்' என்று வெளிப்படையாக அறிவித்தார் ஜனாதிபதி.

ஐ.நாவின் கண்களில் மண்ணைத் தூவி தமது படையினரை ஐ.நா. அமைதிக் காப்புப் பணிக்கு அனுப்பி வைத்துப் பாதுகாத்தோமென தமது உத்தியைச் சொல்லி சிங்களவர்களிடம் பெருமை அடித்துக் கொண்டார்.

பிரதமர் ரணில் எல்லாவற்றிற்கும் உச்சமாய் எந்த 58 ஆவது படைப் பிரிவால் கோரத் தாண்டவம் போல் கொலைப் படலம் நடத்தப்பட்டதோ உறவுகள் ஒப்படைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டனரோ அந்தப் படைப்பிரிவின் தளபதி சவேந்திர சில்வா இராணுவத்தளபதியாக மணிமகுடம் சூட்டப்பட்டுள்ளார். தமிழினப் படுகொலைக்கு பரிசு தந்தாற் போல் சிறப்பு செய்யப்பட்டுள்ளார். தமிழின வழிப்பு என்பது பரிசில் பெறத் தக்க, பதவி உயர்வுப் பெறத்தக்க செயல் என சிங்களத்தலைவர்களால் இனப்படுகொலைப் பண்பாடு உயர்த்திப் பிடிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் பிற நாடுகளோடு இணைந்து கொண்டுவந்த தீர்மானங்களைக் காலில் போட்டு மிதிப்பதற்கு ஒப்பான செயல் இது. ஐ.நா. மனித உரிமை மன்றத்தின் ஆணையர் இதன் பொருட்டு கவலை தெரிவித்தார். இந்நிலையில்தான், யார் பெரிய சிங்கள பௌத்த பேரினவாதி என்பதற்கான ஜனாதிபதி தேர்தலுக்கு அணியமாகிக் கொண்டிருக்கிறது இலங்கைத்தீவு.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தாக்குதலில் தமிழர் மீண்டும் இரத்தம் சிந்தினர். தமிழ் முஸ்லிம்கள் மீது பௌத்தப் பேரினவாதம் நிகழ்த்தி வந்த ஒடுக்கு முறைக்கு சட்ட அங்கீகாரம் கிடைத்தது போல் பேரினவாதம் பேயாட்டம் போடத் தொடங்கியது. தமிழர் தம் குருதியைக் கொண்டு தமிழர் மீது நிகழ்த்தப்பட்ட இன கொலைக் குற்றத்தின் தடயங்களை அழிக்க முற்பட்டு வருகிறது சிங்கள அரசு. "போர்க்குற்ற விசாரணை என்று கேட்டது தான் இராணுவத்தின் உளவியலைப் பாதித்து விட்டது' என குண்டு வெடிப்பு சத்தத்திற்கு இடையிலும் இனக் கொலைக்கு நீதி கோருவதைக் குற்றமாக்கப் பார்த்தார் ஜனாதிபதி மைத்திரி.

ஆயிரமாயிரமாய் போராளிகள் மாண்டனர். ஆயிரமாயிரமாய் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என ஒருவரும் விட்டு வைக்கப்படவில்லை. ஆயிரமாயிரமாய் மக்கள் நாட்டை விட்டு வெளியேறி உலக நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். வடக்கும் கிழக்கும் நிலத் தொடர்ச்சி அற்று பிரிக்கப் பட்டுவிட்டது.

வடக்கில் ஒரு கிராமத்தில் ஒரு சிங்களவர் இருந்தால் கூட அது தமிழ்-சிங்கள கிராமமென முத்திரையிடப்படுகிறது. பௌத்த விகாரைகள் ஊரெங்கும் நிறுவப்படுகின்றன. வளர்ச்சித் திட்டமென்ற பெயரால் நிலப்பறிப்பும் சிங்களக் குடியேற்றமும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

பிராந்தியமெங்கும் ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே மதம், ஒரே பண்பாடு, ஒற்றையாட்சி என ஆளும் வர்க்கத்தாரின் ஓலம் கேட்டுக் கொண்டிருக்கிறது. எழுந்து நின்றால் வாழ்வு, இல்லையேல் இருந்த இடம் தெரியாமல் கரைந்து போக வேண்டும் என்ற அச்சம் மேலோங்கியிருக்கின்றது.

ஆனால், வேலியே பயிரை மேய்ந்தால் போல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாளாவிருக்கின்றனர். வாளாவிருந்தால்கூட பரவாயில்லை, எதிரியின் காலடியில் சரணம் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

பிராந்திய அரசுகளையும் வல்லரசுகளையும் துணைக் கொண்டு இன அழிப்பு வேலைகளை முடுக்கி முன்னேறும் சிங்களப் பௌத்த பேரினவாதத்திற்கு எதிராய் தமிழர் ஒன்றுபட்டாக வேண்டிய தருணமிது. ஒன்றுபட மறுத்தால் அது இறுதியான பொருளில் எதிரிக்கு சேவை செய்வதென அறிந்தும் அறியாமலும் ஒற்றுமைக்கு உலை வைத்துக் கொண்டும் உள்ளனர் சிலர். இத்தனைக்கும் இடையில்தான் நம்பிக்கையை விதைக்கப் போகும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடக்கவிருக்கின்றது.

எழுக தமிழ் பேரணியின் மக்கள் திரட்சியும் அது எழுப்பவிருக்கும் முழக்கமும் நடந்து செல்லும் போது கிளம்பும் புழுதியும் இந்தியப் பெருங்கடலை வட்டமிடும் வல்லரசுகளின் அவ்வல்லரசுகளுக்கிடையில் வாழ்வுநடத்தும் சிங்களப் பௌத்தப் பேரினவாதத்தின் தூக்கம் கெடுக்கட்டும் உடனிருந்து கொண்டே ஊறு செய்வோருக்கு மக்களின் வேணவாக்கள் எவையென்று உணர்த்தட்டும்.

வாழ்வுக்கும்சாவுக்குமான இடைவெளியாய், இருப்புக்கும் அழிவுகுமான இடைவெளியாய் இன மீட்சிக்கும் இன அழிப்புக்குமான இடைவெளியாய் எழுக தமிழ் பேரணி அமையவிருக்கின்றது.

வெல்லட்டும் எழுக தமிழ் பேரணி! அது சொல்லட்டும் உலகுக்கு தமிழர் தாகம் தமிழீழமென்று என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



**"சீனப் பேரரசுக்கு எதிராய் ஹொங்கொங் மக்கள் நடத்திய எழுச்சிப் போராட்டத்தின் வெற்றி - வரலாறு காட்டி நிற்கும் அண்மைய எடுத்துக் காட்டு. அலைகடல் என மக்கள் எழுந்துவிட்டால், பேரரசுகளும்கூட பின் வாங்கியே தீர வேண்டும். அடங்க மறுத்த மக்கள் கூட்டம் நீதிக்காக நிமிர்ந்து விட்டால், சிறுதுளி கடலாவது போல் சிதறிக் கிடக்கும் மக்கள் திரண்டு விட்டால், ஆழிப் பேரலையாய் எழுந்து விட்டால் ஆளும் அரசுகளை ஆணி வேரோடு பிடுங்கி எறியலாம். அந்த அரசுகளுக்கு முட்டுக் கொடுக்கும் துரோக சக்திகள் தீயில் விழுந்து தூசியாய் எரிந்து போவார்கள்."**

## தெரிவுக்குழுவில் 20ம் திகதி ஜனாதிபதி வாக்குமூலம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் குறித்து ஆராயும் பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ள தெரிவுக்குழுவிற்கு ஜனாதிபதி எழுத்து மூலம் அறிவிப்பை விடுத்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதி செயலகத்திற்கு தெரிவுக்குழு உறுப்பினர்களை வரவழைத்து தான் சாட்சியமளிக்கத் தயார் என எழுத்து மூலம் இந்த அறிவித்தலை ஜனாதிபதி வழங்கினார் என்பதை தெரிவுக்குழுத் தலைவர் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி உறுதிப்படுத்தினார்.

மேலும் தெரிவுக்குழுவின் கால எல்லையை இம்மாதம் இறுதி வரைக்கும் நீட்டித்துள்ள போதிலும் குறித்த திகதிக்குள் தெரிவுக்குழு அறிக்கையை முழுமைப்படுத்த முடியாத காரணத்தால் தெரிவுக்குழு கால எல்லையை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீட்டிக்க தெரிவுக்குழு தீர்மானம் எடுத்துள்ளது.

அதற்கமைய சபாநாயகரின் அனுமதியைக் கோரும் வகையில் அடுத்த பாராளுமன்ற அமர்வுகளின் பொது யோசனை ஒன்றினை முன்வைக்கவுள்ளதாகவும் தெரிவுக்குழுத் தலைவர் ஆனந்த குமாரசிறி மேலும் தெரிவித்தார். (இ-7)

## எழுக தமிழ்...

இன மக்களும் தங்களது தாயக விடுதலைக்காக பெருந்திரள் பேரணியை முன்னெடுத்து ஆதிக்க அரசுகளை அதிர வைப்பது தொடர்ந்து நடந்தேறுகிறது. அந்த வகையில் தமிழீழ தாயக மண்ணில் எழுக தமிழ் பேரணி வழியாக மக்களை மீண்டும் தட்டி எழுப்புவது உடனடி தேவையாகும். அதை எழுக தமிழ் பேரணி தொடர்ந்து செய்கிறது.

முள்ளிவாய்க்காலோடு எல்லாம் முடிந்துவிட்டது என சர்வதேச சமூகம் எண்ணிக் கொண்டிருக்கிறது அதே வேளையில் "முள்ளிவாய்க்கால் என்பது முடிவல்ல! தொடக்கம் என்பதை மக்கள் திரள் போராட்ட வடிவங்களே எமக்கு அவ்வபோது நம்பிக்கை ஊட்டுகின்றன. அதில் எழுக தமிழ்பேரணி வரலாற்று முக்கியதுவம் வாய்ந்ததாகும்.

இலட்சக்கணக்கான எமது மக்களை கொன்று குவித்த சிங்கள அரசு தமது குற்றப் பின்னணியிலிருந்து சிக்கிக் கொள்ளாமல் கள்ளத்தனமான அரசியல் நகர்வுகளை தொடர்ந்து நகர்த்துக்கொண்டிருக்கிறது. பன்னாட்டு நீதிமன்றங்களும் அடுத்தடுத்த வாய்ப்புகளை அவர்களுக்கு திறந்துவிடுகிறது. எமக்கான நீதியை தள்ளிவைத்துக் கொண்டே வருகிறது.

பல நாடுகளின் ஒருங்கிணைப்போடு இலங்கை அரசு திட்டமிட்டு நடத்திய இனப்படுகொலையை சர்வதேச அரங்கில் போர் குற்ற ஆதாரங்களோடு பல்வேறு கட்டங்களாக நாம் எடுத்துரைத்தும் எமக்கான நீதி மறுக்கப்பட்டே வருகிறது. ஆனால் இடைவிடாது எமது மக்கள் நிரந்த தீர்வுக்கும் ஆக்கபூர்வமான நீதிக்கும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

எமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை மக்கள் திரள் பேரணிகளும், அறவழிப் போராட்டங்களும், தாயகமண்ணில் மட்டுமல்ல புலம்பெயர் தேசங்களிலும் தமிழர்களால் முன்னெடுக்கப்படும். அதன் ஒரு வடிவமே எழுக தமிழ் பேரணியாகும்.

இந்த பேரணி பன்னாட்டுச் சமூகத்தை அதிரவைக்கும். மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரளவேண்டும்.


தமிழீழ தேசத்தில் திட்டமிட்டு நடத்தப்படும் சிங்கள குடியேற்றம் தடுத்து நிறுத்தப்படவும், இராணுவத்தின் பிடியில் உள்ள தமிழர்களின் நிலங்கள் விடுவிக்கப்படவும், இன விடுதலைக்காக போராடி தங்களது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை அவமதிக்கும் விதமாக மாவீரர் துயிலும் இல்லங்களை தகர்த்தெறிந்த எதேச்சதிகாரத்தை முறியடிக்கவும், அரசியல் கைதிகளாக சிறைக்கொட்டில்களில் சித்திரவதைக்கு உட்பட்டு கிடக்கிற தமிழர்கள் உடனே விடுவிக்கப்படவும்,. கிட்டத்தட்ட 30 ஆயிரம் தமிழர்களுக்கு மேல் காணாமல் ஆக்கப்பட்டோர்களை கண்டறியவும் இந்த எழுக தமிழ் உதவும்.

இனபிரச்சினைக்குத் "தீர்வு" காணாமல் காலம் தாழ்த்துகிற இலங்கை அரசின் கபடத்தனத்தை அம்பலப்படுத்தி, உடனடித்தீர்வுக்கு சிங்கள பேரினவாத அரசை நிர்ப்பந்தித்து, போர்க்குற்றங்களுக்கும், இனப்படுகொலைக்குமான ஒரு அனைத்துலக விசாரணையை வலியுறுத்த வேண்டும் .

மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து எழுக தமிழ் பேரணி மட்டுமல்ல.. உலகெங்கும் வாழும் இன உணர்வுப்பற்றாளர்களும் அறவழிப் போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். அதுவே இப்போது தேவையான ஒன்றாகும்.

தமிழர்கள் நாம் பெரும் எழுச்சிப் போராட்டங்கள் வாயிலகாவே நமக்கான தீர்வை பெறமுடியும். "எழுக தமிழ்" எழுச்சிப்பேரணியாக அமைய வாழ்த்துகிறேன், பெருந்திரளான மக்கள் இப்பேரணியில் கலந்துகொள்ளவேண்டும். உலகத்தின் கவனத்தை ஈர்க்க மீண்டும் நமக்கு ஒரு புதிய வாய்ப்பு எனத் தெரிவித்துள்ளார்.

## இரண்டாவது இன்னிங்சிலும் தெறிக்க விட்ட ஸ்மித்



மான்செஸ்டர் டெஸ்டின் முதல் இன்னிங்சில் இரட்டை சதம் விளாசிய ஸ்டீவ் ஸ்மித், 2வது இன்னிங்சில் 82 ஓட்டங்கள் விளாசி அசத்தியுள்ளார்.

இங்கிலாந்து-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 4வது ஆஷஸ் டெஸ்ட் மான்செஸ்டரில் நடந்து வருகிறது. அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 8 விக்கெட் இழப்புக்கு 497 ஓட்டங்களும், இங்கிலாந்து 301 ஓட்டங்களும் எடுத்தன. அதனைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்சை தொடங்கியது.

தொடக்க வீரர்கள் சொதப்பிய நிலையில், முதல் இன்னிங்சில் இரட்டை சதம் விளாசிய ஸ்மித் இந்த இன்னிங்சிலும் மிரட்டினார். அதிரடியாக விளையாடிய அவர் 92 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 82 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

மேத்யூ வேட் 34 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட் இழப்புக்கு 186 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. அணித்தலைவர் டிம் பெய்ன் 23 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் ஆர்ச்சர் 3 விக்கெட்டுகளும், பிராட் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

அவுஸ்திரேலிய அணி டிக்ளேர் செய்ததன் மூலம், இங்கிலாந்துக்கு 383 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது.

தொடக்க வீரர் பர்ன்ஸ் மற்றும் அணித்தலைவர் ஜோ ரூட் இருவரும் ஓட்டங்கள் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். நேற்றைய 4ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 2 விக்கெட் இழப்புக்கு 18 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டென்லி, ஜேசன் ராய் இருவரும் களத்தில் உள்ளனர். இன்னும் இங்கிலாந்தின் வெற்றிக்கு 365 ஓட்டங்கள் தேவை. (க)

## செரினாவின் சாதனைக்கனவு தகர்ந்தது சம்பியன்பட்டம் வென்ற பியான்கா




அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்சை தோற்கடித்து சாதனை படைத்துள்ளார் கனடாவின் பியான்கா.

பரபரப்பாக நடந்து முடிந்த இந்த ஆட்டத்தில் நட்சத்திர வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், 20 வயதேயான இளம் வீராங்கனையும் தர நிலையில் 15 ஆம் இடத்தில் இருப்பவருமான பியான்காவை எதிர்கொண்டார்.

அமெரிக்க ஓபன் பட்டத்தை வென்று டென்னிஸ் வரலாற்றில் அதிக கிராண்ட்லாம்களை வென்றவரின் சாதனையை செரீனா சமன் செய்வார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில்,

6 - 3, 7 - 5 என்ற செட் கணக்கில் பியான்காவிடம் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளார் செரீனா.

துவக்கம் முதலே விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில், கனேடிய வீராங்கனை பியான்காவின் கை ஓங்கியிருந்தது.

37 வயதான செரீனா வில்லியம்ஸ், இதுவரை 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

## பும்ரா- ஆச்சர் பந்து வீச்சை ரசிக்கிறேன் தென்னாபிரிக்க வேகப்புயல் ரபாடா



தென்ஆப்பிரிக்கா அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ரபாடா. தென்ஆப்பிரிக்கா அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாட இருக்கிறது. எதிர்வரும் 15ஆம் திகதி டி-20 தொடர் தொடங்கும் நிலையில், இந்திய தொடர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று தெரிவித்த ரபாடா, பும்ரா மற்றும் ஆர்சர் போன்ற பந்து வீச்சாளர்களின் வளர்ச்சியால் கவலைப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ரபாடா கூறுகையில் "பும்ரா, ஆர்சர் போன்ற பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சை நான் ரசிக்கிறேன். ஏனென்றால் அவர்கள் சிறந்த பந்துவீச்சாளராவார் எனினும், மீடியாக்கள் குறிப்பிட்ட சில வீரர்களை மட்டுமே மிகைப்படுத்துகின்றன.

நான் சிறப்பாக விளையாடி கொண்டிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும். ஆர்சர் இயற்கையான திறமையை கொண்டவர். பும்ரா அதிசயங்களை நிகழ்த்தி கொண்டிருக்கிறார். இவர்களால் எனது ஆட்டம் எனக்கு உத்வேகத்தை கொடுக்கும். ஒரு பந்து வீச்சாளர் எப்போதுமே நம்பர் ஒன் பந்து வீச்சாளராக இருக்க முடியாது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

மீண்டும் இந்தியாவுக்கு வந்தது மகிழ்ச்சியாக உள்ளது. கிரிக்கெட் விளையாடுவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என ரபாடாமேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியா - தென்ஆப்பிரிக்கா இடையே தலா மூன்று போட்டிகள் கொண்ட டி20, டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற இருக்கிறது. (க)

## கணிதம் என்றால் எனக்கு அலேஜீக் விராட்கோலி வெளிபபடைப் பேச்சு




கிரிக்கெட்ரை விட கணித பாடத்திற்கு அதிகமாக உழைத்ததாக இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

விராட் கோலி விளையாட்டு வலைதளத்தின் நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். அப்போது தனது கிரிக்கெட் குறித்தும், பள்ளிப் பருவம் குறித்தும் அவர் மனம் திறந்தார்.

தனது வாழ்வில் கிரிக்கெட்டை விட கணித பாடத்திற்கு தான் அதிகமாக உழைத்தாக அவர் குறிப்பிட்டார்.

'2012ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய தொடருக்கு பின் என்னுடைய உடற்தகுதியில் அதிகமாக கவனம் செலுத்தினேன்.

அத்துடன் அன்று முதல் என்னுடைய சிறப்பான ஆட்டத்தை ஒவ்வொரு போட்டியிலும் வெளிப்படுத்த வேண்டும் என்று நினைத்தேன். என்னுடைய பள்ளி பருவத்தில் நான் மிகவும் கஷ்டப்பட்டது கணக்கு பாடத்தை படிக்கத் தான். குறிப்பாக, பத்தாம் வகுப்பு கணித பாடத்தில் தேர்ச்சி பெற மிகவும் உழைத்தேன். அந்த அளவிற்கான உழைப்பை இதுவரை நான் கிரிக்கெட் வாழ்க்கையில் கூட செய்தது இல்லை.

பொதுவாக கணித பாடத்தில் 100 மதிப்பெண்களுக்கு நான் 3 மதிப்பெண் எடுப்பேன். எனக்கு கணித பாடம் எளிதாக புரியாது. ஆகவே தான் எப்படியாவது பத்தாவது வகுப்பை முடிக்க வேண்டும் என்று கருதி கடினமாக உழைத்தேன்' என தெரிவித்துள்ளார். (க)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTADதரம்/ பதிவு | கேள்விப் பிணைப் பணம்செல்லு படியாகும் காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| 01 | KN/DPS/DO4/ONU/ 172-6 | உவர்நீர்த்தடுப்பணை புனரமைத்தல் - ஞானிமடம், பூநகரி. | 4.15 மில்லியன் (வரி நீங்கலாக) | C8 or C7 Building | ரூபா 41,500.00 வங்கிப் பிணை 22.12.2019வரை | ரூபா 2000.00 |
| 02 | KN/DPS/DO4/ONU/ 172-7 | உவர்நீர்த்தடுப்பணை புனரமைத்தல் - கிளாலி, பளை | 3.36 மில்லியன் (வரி நீங்கலாக) | C8 or C7 Building | ரூபா 33,600.00 வங்கிப் பிணை 22.12.2019 வரை | ரூபா 2000.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.

I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (ii) இலக்க 08.05.2019 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு 5% முன்னுரிமையளிக்கப்படும்.

IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-021 228 5663, பக்ஸ் இல:-021 228 3966)

3. கேள்வி ஆவணங்களை 09.09.2019 ஆம் திகதியிலிருந்து 22.09.2019 ஆம் திகதிவரை முற்பகல் 9.00மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

5. அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/........................." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 23.09.2019 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.


6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

7. கேள்வி கோரலுக்கு முன்னரான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting ) 17.09.2019 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(C-7531)

**சுந்தரம் அருமைநாயகம்,**
**திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**



வேலணை வடக்கு இலந்தை வனப்பதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

## 2021லிருந்து நாடு முழுவதும் மக்கள் தொகை கணக்கெடுப்பு

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டில் நாடுமுழுவதும் மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு குடிசன மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, நாடுமுழுவதும் உள்ள 14 ஆயிரம் கிராமசேவகர் பிரிவுகளில் இதற்கான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குடியிருப்புக்களின் எண்ணிக்கை, அங்கத்தவர்களின் எண்ணிக்கை, அவர்களின் வருமான வழிமுறைகள் என்பன உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் இதன்போது பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கும் ஒரு முறை இவ்வாறான கணக்கெடுப்பு இடம் பெறும்.

இந் நிலையில், இம்முறை புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்த எதிர்பார்ப்பதாகவும் குடிசன மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த பணிகளுக்காக ஆயிரத்து 700 உத்தியோகத்தர்களையும், அவர்களுக்கு மேலதிகமாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் இணைத்துக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## இராசி பலன்

**09.09.2019**

ஆவணி 23, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 3.22 மணிவரை
பூராடம் பிற்பகல் 12.40 மணிவரை
சுபநேரம் 12.04 - 1.34 மணிவரை
இராகுகாலம் 7.34- 9.04 மணிவரை
பரிவர்த்தன ஏகாதசி விரதம்

வளவன்

கிரகநிலை: ராகு; சூரி, செவ், சுக்; புத; குரு; சனி, சந், கேது

சந்திராஷ்டமம்: மிருகசீரிடம், திருவாதிரை

**மேடம்:** செய்தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**இடபம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், உறவினர், நண்பர்களிடம் பேசும் போது கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**மிதுனம்:** புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பழைய சடங்கு சம்பிரதாயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், உற்சாகமான நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**கன்னி:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகமுண்டு, செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு.

**மகரம்:** தொழிலில் இடமாற்றம், ஊர்மாற்றம் என்பன இடம் பெறலாம், உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்:** நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, தூரதேசத்து தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழித் த்கவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

## பிரதேச சபை உறுப்பினர் வீட்டில்

# கஞ்சா தேடிய பொலிஸ் களங்கம் எனப் புகார்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் சுதந்திரக் கட்சி உறுப்பினரான எனது வீட்டில் கஞ்சா இருப்பதாகக் கூறிப் பொலிஸார் தேடுதல் நடத்தியதால் எனது நற்பெயருக்கும், சாவகச்சேரி பிரதேச சபைக்கும் களங்கம் ஏற்பட்டிருப்பதாக பிரதேச சபை உறுப்பினர் குகானந்தன் தெரிவித்தார்.

கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக சபையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் நானும், எனது குடும்பத்தினரும் வீட்டில் இல்லாத சமயம் பத்திற்கும் மேற்பட்ட பொலிஸார் வந்து எனது வீட்டில் சோதனையிட்டதுடன் அயலவர்களுக்கு எனது வீட்டில் கஞ்சா இருப்பதாகத் தெரிவித்தனர்.

ஆனால் இது தொடர்பாக பொலிஸாரால் எனக்கு எந்த அறிவித்தலும் இதுவரை வழங்கப்படவில்லை. சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர்கள் எனது வீட்டைச் சோதனை செய்ய வரவில்லை என்று கூறுகின்றனர்.இந்தச் சம்பவத்தால் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர் என்ற வகையில் எனது நற் பெயருக்கும்,சாவகச்சேரி பிரதேச சபைக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது.

எனவே இவ் விடயத்தை பிரதேச சபை ஊடாக வட மாகாண உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு தெரியப்படுத்தி தீர்வு காண முன்வர வேண்டும். இவ் விடயம் ஏனைய சபை உறுப்பினர்களையும் பாதிக்கும். அதன் காரணமாக சபை ஊடாக நடவடிக்கை எடுக்கக் கோருகின்றேன் என மேலும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரணை செய்யுமாறு உதவிப்பொலிஸ் அத்தியட்சகருக்கு பிரதேசசபை ஊடாக கடிதம் அனுப்பப்படும் எனக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய உப தவிசாளர் செ.மயூரன் உறுதியளித்தார். (இ-30)

# வல்லை கடல்நீர் ஏரிக்குள் தலைகீழாகப் புரண்ட வான்



(கரணவாய்)

விபத்தொன்றில் சிக்கிய வான் வல்லை கடல்நீர் ஏரிக்குள் பாய்ந்து தலைகீழாகப் புரண்டு விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றது.

வீதியில் பயணித்த வான் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி பின்னர் கடல்நீர் ஏரிக்குள் பாய்ந்தது.

இதில் வான் தலைகீழாகப் புரண்டு விபத்துக்குள்ளான போதும் வாகனத்தின் சாரதிக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் சிறிய காயமடைந்த நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# சாவகச்சேரியில் இளைஞர் முகாம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச இளைஞர் முகாம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தீப்பாசறை,இசை நிகழ்வுகள் மற்றும் தலைமைத்துவப் பயிற்சி உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற விருப்பதுடன் நிகழ்வின் இறுதியில் இளைஞர் முகாமில் பங்கு பற்றியவர்களுக்குப் பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

மேலதிக விபரங்களைத் தெரிந்துகொள்ள தென்மராட்சிப் பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி அல்லது யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளன அமைப்பாளர் ஆகியோரைத் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டது. (இ-7)

## அமைச்சர் சஜித்தால் இன்று

# பொக்கணைக் கிராமம் பொதுமக்களிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊரெழு பொக்கணைக் கிராமத்தில் அமைக்கப்பட்ட 19 வீடுகளை இன்று திங்கட் கிழமை காலை 8 மணியளவில் வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ திறந்து வைப்பார்.

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் ''செமட்ட செவன'' தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 274 ஆவது மாதிரிக் கிராமமாகப் பொக்கணைக் கிராமம் இன்று பொது மக்களிடம் கையளிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)




# கல்வி இராஜாங்க அமைச்சரால் நான்கு கட்டடங்கள் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இன்று கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரனால் நான்கு பாடசாலைக் கட்டடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

மத்திய கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட குறித்த பாடசாலைக் கட்டடங்களை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு இன்று இடம்பெறும்.

காலை 7.30 மணியளவில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் திறன் வகுப்பறையும் முற்பகல் 10 மணியளவில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலைக் கட்டடமும் முற்பகல் 11.30 மணியளவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அதிபர் விடுதியும் பிற்பகல் 12.30 மணியளவில் சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் ஸ்மாட் வகுப்பறை என்பனவும் கல்வி இராஜாங்க அமைச்சரால் திறந்து வைக்கப்படும். (இ-10)

# உதவித் திட்டங்கள்



(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தினூடாக கடந்த மாதம் 26 ஆம் திகதி கனடாவில் வசித்துவரும் விஜயகுமார் குடும்பத்தினர் யாழினி, சாலினி ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு வறிய மாணவர்களுக்கும் மாற்றுவலுவுடையவர்களுக்கும் உதவும் நோக்கில் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவியை வழங்கினர்.

இவ் உதவித்தொகையினூடாக உடுவில், கோப்பாய், அரியாலை, நீர்வேலி , நயினாதீவு போன்ற இடங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 3 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டியும், 3 பெண்களுக்கு தையல் இயந்திரமும் ஒரு மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கரநாற்காலியும் ஒரு மாற்றுத்திறனாளிக்கு மூன்று சில்லு சைக்கிளும் நன்கொடையாக வழங்கப்பட்டன. (இ-7)

# யாழ்.,கிளிநொச்சி வரை நகர வலயமைப்பு

## அமைச்சர் சம்பிக்க யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரை துரித நகரத் திட்ட வலயமைப்பு வேலைகளை ஆரம்பிக்கவுள்ளதாக மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தான் அமைச்சராக இருந்த காலத்தில் இருந்து யாழ்ப்பாண மக்களுக்காகப் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை திறம்படச் செய்ததாகவும் குறிப்பாக தான் முன்பு வகித்த அமைச்சான மின்சக்தி அமைச்சின் மூலம் யாழ். குடாநாட்டில் மின்சார வசதியின்றி அவதிப்பட்ட அநேகமானோருக்கு மின்சாரத்தை வழங்கியதாகத் தெரிவித்தார்.

மேலும் யாழில் அடிக்கல் நாட்டப்பட்ட யாழ். மாநகர சபைக்கான புதிய கட்டடத்தின் வேலைகள் எவ்வித தேர்தல் வாக்குறுதியாக அமையாதெனவும் குறித்த திட்டம் நீண்டகாலமாக தயாரிக்கப்பட்டு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் எனது அமைச்சின் ஊடாகச் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் யாவும் இரண்டு வருடகாலமாகச் சுமார் 3 ஆயிரம் துறைசார் வல்லுநர்களை இணைத்து அவர்களின் ஆலோசனை, அபிப்பிராயங்களை உள்ளடக்கியே அனைத்துத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தையும் கிளிநொச்சியையும் இணைக்கும் துரித நகரத் திட்ட வலயமைப்பு ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அமைச்சர் சம்பிக்க மேலும் தெரிவித்தார். (இ-10-101)



பனைசார் உற்பத்தி நிலையம், புனரமைப்புச் செய்யப்பட்ட நவா சனசமூக நிலையம் மற்றும் புதிதாக தார் வீதியாக மாற்றப்பட்ட கரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சி ஊரெல்லை வீதி ஆகியவற்றின் திறப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நவா சனசமூக நிலையத் தலைவர் சி.சீவரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

# ரணிலுக்கும் கட்சியில் ஒரே சட்டம் தான்-சுஜீவ

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி வேட்பாளராக வர எதிர்பார்ப்பு இருந்தால், அவரது தீர்மானத்தை மத்திய செயற்குழுவுக்கு தெரிவிக்க முடியும் எனவும், மத்திய செயற்குழுவே அது தொடர்பில் தீர்மானத்தை எடுக்கும் எனவும் அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் கலந்துரையாடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக பெயரிட வேண்டும் என கலந்துரையாடவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைப் பிரதிநிதிகள் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)




பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.சுவான்பிள்ளை அன்ரன்சிங்கராசா

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் **"மாவை சேனாதிராசா"** அவர்களின் சிபார்சின் பேரில் **திரு.சுவான்பிள்ளை அன்ரன் சிங்கராசா"** அவர்கள் "அகில இலங்கை சமாதான நீதிவான்" பதவியினை 05.09.2019 வியாழக்கிழமை அன்று "மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி" உயர்திரு **"அ.பிறேமசங்கர்"** முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பெற்றுக் கொண்டமையினை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-7534)

இல.52, "குமுதெனி",
அல்வாய் வடமத்தி, அல்வாய்.
077 533 4841

வாழ்த்துவோர்:
அப்பா, மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மச்சான்மார்,
மச்சாள்மார், பெறாமக்கள், மருமக்கள்.



பழைமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கல்ரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(129)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரொங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



பாராட்டி வாழ்த்துகிறோம்

திரு.ஐயாத்துரை குணசீலன் (SLPS-III)



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் உப அதிபராகக் கடமையாற்றும் திரு. **ஐயாத்துரை குணசீலன்** அவர்கள் 02.09.2019 அன்று தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக வடமாகாண மேல் நீதிமன்றத்தில் மாகாண நீதிமன்ற நீதிபதி திரு.அ.பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரை எமது கல்லூரி சமூகம் சார்பாக மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(119)

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.



## வடக்கின் இளைஞர்,யுவதிகளுக்கு தேசமானிய M.T.S. இராமச்சந்திரன் 2ஆம் மொழியின் தந்தை என்றால் மிகையாகாது





இந்து பௌத்த கலாசார பேரவையால் 2010 ஆம் ஆண்டு 2ஆம் மொழி கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டு இன்று 09 வருடங்கள் கடந்துள்ளது. இதில் 15000 மாணவர்கள் பயின்று சித்தியடைந்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிலிருந்து யாழ்.மாவட்டத்தில் திறமையான சிங்கள மொழி மாணவர்கள் 300 பேருக்கு ஆசிரியருக்கான பயிற்சி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போது வடமாகாணம் முழுவதும் 4000 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இதற்கான வகுப்புக்கள் எங்களால் அனுமதி பெறப்பட்ட அனைத்து அரச பாடசாலைகளிலும் 6 மாதங்கள் 120 மணித்தியாலங்கள் கற்பிக்கப்பட்டு தேசிய மட்டத்தில் பரீட்சை நடத்தி சான்றிதழ் வழங்கப்படும். இச் சான்றிதழ் இதுவரை காலமும் ஜனாதிபதி, துறைசார் அமைச்சர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், தலைவர்கள், செயலாளர்கள் கையொப்பமிட்டு வழங்கப்பட்டன.

இந்து பௌத்த கலாசார பேரவை இனங்களின் ஒற்றுமைக்காகவும் மற்றும் இரு மதங்களின் ஒற்றுமைக்காகவும் ஆரம்பிக்கப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அடிப்படைக் கொள்கைக்கிணங்க இச் சமூக சேவை நடாத்தப்பட்டு வருகின்றன. இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் நாட்டின் அபிவிருத்திக்காக கல்வி, கலாசாரம் போன்ற நடவடிக்கைகளில் இலங்கையின் நேரடியாக தொடர்பு கொண்டு முழு நாட்டையும் அபிவிருத்தி செய்து ஒத்துழைப்பு வழங்குவதே ஆகும்.

2019 செப்டெம்பர் 02 ஆம் திகதி சங்கானை வீதி, அச்சுவேலியில் இந்து பௌத்த கலாசார பேரவையின் 2ஆம் மொழி கற்கைநெறிக்கான தலைமைக்காரியாலயம் பாராளுமன்ற உறுப்பினர், இந்து பௌத்த கலாசார பேரவையின் தலைவருமான வண, அத்துரலிய ரட்ண தேரர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்து பௌத்த கலாசார பேரவையின் தலைவராக கடந்த 10 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினர் வண, அத்துரலிய ரட்ண தேரர் கடமையாற்றுகிறார். புலம்பெயர் தமிழரான சர்வதேச குடிவரவு குடியகல்வு சட்ட ஆலோசகருமான தேசமானிய M.T.S. இராமச்சந்திரன் நிதி அனுசரணையாளராகவும் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார்.

ஆரம்பத்தில் மாண்புமிகு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதன் பின்னர் மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன போசகர்களாக கடமையாற்றி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை இந்து பௌத்த கலாசார பேரவையால் நடத்தப்பட்ட பாடநெறி வகுப்புக்களில் கல்வி கற்ற மாணவர்கள் 5000 பேருக்கு மேல் வெளி மாவட்டங்களில் வேலை பெற்றுள்ளதுடன் அரச: தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றுகின்றனர். இந்து பௌத்த கலாசார பேரவையில் ஏற்கனவே 15000 மாணவர்களும் தற்போது 4000 மாணவர்களும் அங்கத்துவம் பெற்று இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் எங்களால் குறிப்பிட்டு அனுமதி பெற்ற அனைத்து அரச பாடசாலைகளிலும் இலவச ஆங்கில, சிங்கள பாடநெறிகள் இந்து பௌத்த கலாசார பேரவையால் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதை அறியத்தருகிறோம்.**

இந்த வகையில் தேசமானிய M.T.S. இராமச்சந்திரன் வடக்கில் இளைஞர், யுவதிகளுக்கு 2ஆம் மொழியின் தந்தை என்றால் மிகையாகாது.

**குறிப்பு:- அச்சுவேலியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் காலை,மாலை மற்றும் சனி,ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.**

மேலும் விபரங்களுக்கு: 077 271 1181, 076 181 4183


(9296)

# சுட்டும் முகநூல் 20

Like Love Haha Yay Wow Sad Angry

**நயினை சுதர்ஷன்**
4 September at 18:03

சுத்தத்திற்கு முன்னுதாரணமாய் திகழ்ந்த கசூரினா.......
காரைநகர் கசூரினா கடற்கரையில் கழிவுப் பொருட்களை சரியாகப் பேணுவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட கழிவுபோடும் பாத்திரம் இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
இது கசூரினா beach இல் சாத்தியம் என்றால். ...?? ஏன் வேறு இடங்களில் நடைமுறைப்படுத்த முடியவில்லை....?
சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனமெடுத்து நாட்டிலுள்ள அனைத்து கடற்கரைகளிலும் இத்தகு சீரிய திட்டங்களை நடைமுறைப் படுத்தி சுத்தமான சுகாதாரமான சூழலை உருவாக்குவோம்.



**Arinesaratnam Gowrikanthan**
5 hrs · Shared via AddThis

தமிழின அழிப்புக்காக ஸ்ரீலங்கா அரசினைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் தமிழ் மக்களின் முயற்சி அனைத்துலகக் கவனத்தை ஈர்த்திருந்தாலும் அனைத்துலக அரசுகளின் அங்கீகாரத்தை இதுவரை பெறவில்லை. இனவழிப்பு நிகழ்ந்தது என்பதனை அரசுகளை ஏற்றுக்கொள்ள வைப்பது இலகுவானதொரு விடயமல்ல. இவ் அங்கீகாரம் தரக்கூடிய அரசியல் விளைவுகளே இதற்குப் பிரதான காரணம். தமிழ் மக்கள் இவ்விடயத்தில் எந்தவிதமான விட்டுக் கொடுப்புமின்றிப் போராடுதல் மிக அடிப்படையானது.

**Shanmugalingam Senthuran**
Yesterday at 12:12

இரண்டு முறை கால நீடிப்புக்கு ஆதரவாக ஏன் வாக்களித்தீர்கள்.




**Dila Ni**
4 September at 21:16

"எழுக தமிழ்" என்பது தமிழருக்கு பொதுவான சொல் தானே இதில் எதற்கு கட்சி பேதங்கள்???

அன்பு வாசகர்களே! சுட்டும் முகநூல் என்ற புதியதொரு களம் உங்கள் கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது. முகநூல்களில் நீங்கள் இரசித்து பார்த்த அல்லது உங்கள் முகநூல் பக்கத்தில் நீங்கள் முன்வைத்த ஆழமான-யதார்த்தமான கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவிடப்படும். இதற்கு உதவியாக முகநூலில் வெளிவரும் அறிவார்ந்த கருத்துக்களை www.facebook.com/valampurii எனும் தளத்தில் உள்பெட்டி (Messenger) ஊடாக அனுப்பி வைக்கலாம்.

வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532


## முதலாம் ஆண்டு நினைவில்...

### சுவர்க்க ஸ்ரீமதி நாகபூஷணி சோமசுந்தரக் குருக்கள் (கோலம் அம்மா)

திதி: ஆவணி மாத வளர்பிறை ஏகாதசி

பிரதி விம்பத்திற்கு
உயிரூட்டிய உயிரோவியமாய்
மணமக்கள் வாழ்வில்
கான மழையாய்
சோதனைகளைத் தாண்டிய
சாதனை மகளாய்
கோலத்துக்காக அவதரித்த
கோலமகளாய் உறவுகளைப்
பேணிக்காத்த குடும்பத் தலைவியாய்
எங்கள் வாழ்வுக்கு
ஒளியூட்டிய குலமகள்
நல்லைக்கந்தனின் காலடி சேர்ந்து
ஆண்டொன்று ஆனதம்மா



அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"சோமராகம்,"
323/8D, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C-7547)

குடும்பத்தினர்.


# தேசிய தௌஹீத் ஜமாத் தொடர்பில் 228 தடவைகள் புலனாய்வு எச்சரிக்கை

## சட்டமா அதிபர் திணைக்களம் தகவல் பூஜித,ஹேமசிறி மீது பிடி இறுகுகிறது



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோர் மீது கொலை மற்றும் கொலைச்சதித் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவுள்ளதாக, சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோருக்கு கொழு ம்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணையை மீளாய்வு செய்யக் கோரி, கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த விசாரணைகளில் சட்டமா அதிபர் தரப்பில் முன்னிலையான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ், முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோர் மீது, கொலை மற்றும் கொலைச் சதிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவுள்ளன என்று தெரிவித்தார்.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தாக்குதல்கள் குறித்து, இவர்கள் இருவருக்கும் அரச புலனாய்வு சேவையால் திரும்பத் திரும்ப எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும், உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினர் என்றும், பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ், தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபருக்கு 131 தடவைகளும், முன்னாள் பாதுகாப்புச் செயலருக்கு 97 தடவைகளும், தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு தொடர்பான புலனாய்வு எச்சரிக்கைகள், அரச புலனாய்வு அமைப்புகள் ஊடாக வழங்கப்பட்டன.

இந்த எச்சரிக்கைகளை கவனத்தில் கொள்ளாமல், கொலைகள் இடம் பெறுவதற்கு காரணமாக இருந்தனர் என்ற அடிப்படையிலேயே இவர்களுக்கு எதிராக கொலை மற்றும் கொலைச் சதி வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும், பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ், தெரிவித்தார். (இ-228)

# சஜித்திற்கு எதிராக சரத் போர்க்கொடி

## "காலைப் பின்னோக்கி வைக்க முடியவில்லை என்றால் அப்படியே இருக்க வேண்டியதுதான்"



(கொழும்பு)

அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் என எந்தவகையிலும் வாக்குறுதி வழங்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா போர்க்கொடி உயர்த்தியுள்ளமை கட்சி உறுப்பினர்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

தான்தோன்றித்தனமாக ஒவ்வொருவருக்கும் தேவையான வகையில் கட்சியை பயன்படுத்தக் கிடைக்காது.

ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்ற நிலைப்பாட்டில் இருந்தே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன.

சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் என்று எந்த வகையிலும் உறுதியளிக்கப்படவில்லை. அப்படியான உறுதிமொழிகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

அப்படியானால், ஐக்கிய தேசியக் கட்சி தவிர்த்து விட்டு வேறு வழியில் போட்டியிட நேரிடும்.

காலை பின்னோக்கி வைக்க முடியவில்லை என்றால் இருக்கும் இடத்திலேயே இருக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ரணில்-சஜித் சந்திப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் குறித்து தீர்மானம் எடுக்கும் முக்கிய சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், இந்தப் பேச்சுவார்த்தை நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளதாகவும் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார். கட்சிக்குள் உருவாகி இருக்கும் முறுகல் நிலையை முடிவுக் குக்கொண்டு வரும் வகையில் கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும்பிரதித்தலைவர்அமைச்சர் சஜித் பிரேமதாஸவும் தனியாக நேற்று இரவு சந்திக்கவிரு ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பேசாலை தொடக்கம் பூநகரி வரையான சமூக மட்ட அமைப்புக்கள் மத்தியில்

## எழுக தமிழ் எழுச்சி பேரணிக்கான பரப்புரை



(மன்னார்)

தமிழ் மக்கள் பேரவையினால் எதிர்வரும் 16 ஆம் திகதி முன்னெடுக்கப்படவிருக்கும் எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணிக்கான முன்னேற்பாடுகள் குறித்து மன்னார் மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கரையோரப்பகுதிகளை உள்ளடக்கிய பேசாலை தொடக்கம் பூநகரி வரையான சமூகமட்ட அமைப்புகளுடன் முக்கிய சந்திப்பு நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் எழுக தமிழ் பரப்புரையில் தன்னார்வமாக ஈடுபட்டுவந்த சமூக செயற்பாட்டாளர்களது ஏற்பாட்டில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இச்சந்திப்பில் தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழ்-2019 ஏற்பாட்டுக் குழுவினர் பங்கேற்று விளக்கக் கருத்துக்களை முன்வைத்திருந்ததுடன் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கான முன்னேற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

தேவன்பிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றிருந்த இச்சந்திப்பில் பேசாலை, ஓலைத்தொடுவாய், வலைப்பாடு, தேவன்பிட்டி, கத்தாளம்பட்டி, நாவாந்துறை, மூன்றாம்பிட்டி, கள்ளியடி, படகுத்துறை, இலுப்பைக்கடவை, பூநகரி உள்ளிட்ட பகுதிகளில் செயற்பட்டுவரும் சமூகமட்ட அமைப்புகளின் சார்பில் வருகைதந்திருந்த ஐம்பதிற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். இதன்போது குறித்த பகுதிகளில் இருந்து எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு மக்களை அணிதிரட்டி வருவது குறித்து ஆலோசிக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாட்டுக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)

## குறை'களை' பதிகம் 86

### சத்தியம் செய்து சாரத்தியம் செய்வோம்

வாழ்க்கை ஒரு வட்டம் என்பார்
அந்த வட்டத்திற்குள்தான்
எல்லாம் எல்லாமாகிறது

இதைத்தான்
பூச்சியத்துள் இராச்சியம் வைத்து
புரியாமல் இருப்பான் மனிதன்
என ஆன்றோர் வகுத்து வைத்தனரோ

உலக மயமாதலில்
சக்கரம் கண்டுபிடித்தமை
உன்னதமான கண்டுபிடிப்பு
சக்கரங்களின் அதீத வளர்ச்சி
சரித்திரங்கள் பல படைத்தாலும்
அதே சக்கரங்களால்
சாலை விபத்துக்களில்
மாண்டு போகிறது கோடி உயிர்கள்

கட்டுப்பாட்டையிழந்த பிக்கப்
மரத்துடன் மோதி விபத்து

வேகமாக வந்த டிப்பர்
முதியவரை மோதியதில் அவர் பலி

பாலியாற்றில் ட்ரக்டர் புரண்டதில்
இளம் குடும்பஸ்தர் பரிதாப சாவு

நின்ற லொறியுடன் வந்த ஹயஸ் மோதல்
வெளிநாட்டவர் எண்மர் பலி

வேகமாக வந்த மோட்டார்சைக்கிள்
மின்கம்பத்துடன் மோதியதில்
இளைஞன் ஸ்தலத்தில் பலி

இப்படி பத்திரிகையைத் திறந்தால்
விபத்தால் மரண ஓலம் ஒலிக்க
வீதியில் கால்வைக்க
நெஞ்சம் பதைபதைக்கிறது

வீதிச்சமிக்ஞைகள் எல்லாம்
வீண் என எண்ணி
விசும்புச் சாரத்தியம் செய்ய
வீணாய்ப்போவது
விலைமதிப்பில்லா உயிர்களல்லவா?

அன்பாய் உறவுகளுடன் கூட
வெளிநாட்டில் இருந்து வருவோர்
விபத்தில் அகால மரணமடைந்துவிட
ஆறாத ரணங்கள் யாரைச் சாரும்

'சாரத்தியம் என்பது
உயிர் காப்பே அன்றி
உயிர் எடுத்தல் அல்ல

இதைப்புரிந்து கொண்டு
வீதிச்சமிக்ஞை அறிந்து
எம்மையும் எம் உறவுகளையும்
சுற்றம் சூழலையும் காப்போம்

விபத்தினால் வீணாய் உயிர் போகாது
காப்போம் காப்போம்
காப்பரனாய் நிற்போம் என
சத்தியம் செய்து சாரத்தியம் செய்வோம்

மாவை. நா.கஜேந்திரன்

அன்பு வாசகர்களே!

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# விவசாய நிலத்தை மீட்க வவுனியாவில் போராட்டம்





(நெளுக்குளம்)

வவுனியா போஹஸ்வெவ பகுதியில் சிவில் பாதுகாப்புப் படையின் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயப் பண்ணைக்காணியை அப்பகுதியில் அரசியல் தலைமைகளினால் குடியேற்றப்பட்ட மக்கள் தமக்கு விவசாயம் மேற்கொள்வதற்கு பகிர்ந்தளிக்குமாறு கோரியுள்ளனர்.

இதையடுத்து அக்காணியின் உரிமையாளர்கள் நேற்று மதியம் தமது விவசாயக் காணியை சிவில் பாதுகாப்புப் படையினரிடமிருந்து மீட்டுத் தருமாறு கோரிப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

போஹஸ்வாவே நந்தி மித்திரகம நம்பாவெட்டிகுளம் பகுதியில் அப்பகுதி மக்கள் பேரணியாகத் தாம் விவசாயம் மேற்கொள்ளும் பகுதிக்குச் சென்று சிவில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள தமது பூர்வீகக் காணியை மீட்டுத் தருமாறு கோரிப் போராட்டம் மேற் கொண்டனர்.

மாமடுவ, மகாகச்சக்கொடிய, பிரப்பமடு பகுதிகளிலிருந்து சென்ற மக்கள், கமக்கார அமைப்புக்கள், பௌத்த தேரர் தலைமையில் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் அப்பகுதி கமக்கார அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (9-299)

# டிப்பர் விபத்து;சாரதி படுகாயம்!



(நெளுக்குளம்)

வவுனியா மடுகந்தை பகுதியில் நேற்று அதிகாலை டிப்பர் வாகனம் ஒன்று மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹெப்பற்றிகொலாவ யானுஓயா பகுதியிலிருந்து வவுனியா நோக்கி மணல் ஏற்றிக்கொண்டு பயணித்த டிப்பர் வாகனம் மடுகந்தை பகுதியில் (மடுகந்தை தேசிய பாடசாலைக்கு அண்மையில்) சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தானது சாரதியின் நித்திரைத் தூக்கம் காரணமாகவே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவ இடத்திற்கு விரைந்த மடுகந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (9-299)

# கிளி. நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் செய்யப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் இம்முறை வெற்றிகரமான அறுவடை

(கண்டாவளை )

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள இரணைமடுக்குளம் உள்ளிட்ட ஒன்பது குளங்களின் கீழ் இவ்வாண்டு 68 சதவீதமான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டு வெற்றிகரமாக அறுவடை செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வருடாந்தம் காலபோகத்தின் போது நீரப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள இரணைமடுக்குளம் உள்ளிட்ட ஒன்பது குளங்கள் மற்றும் சிறிய நடுத்தர குளங்கள் மானாவாரி பயிர்ச்செய்கை நிலங்கள் உள்ளடங்கலாக 59 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டாலும் சிறுபோகத்தின் போது குளங்களின் நீரின் அளவைக்கொண்டு இரணைமடுக்குளம் உள்ளிட்ட ஒன்பது குளங்களிலும் முப்பது வீதமான நிலப்பரப்பிலேயே சிறுபோக செய்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த இரு ஆண்டு நிலவிய வரட்சி மற்றும் இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப்பணிகள் காரணமாக மிகக்குறைந்தளவு நிலப்பரப்புக்களில் சிறுபோக செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த ஆண்டு இரணைமடுக்குளத்தின் புனரமைப்பு பணிகள் நிறைவு பெற்று விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டதையடுத்து பாரிய அளவில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக்குளம் உள்ளிட்ட ஒன்பது குளங்களின் கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பில் 68 வீதமான நிலப்பரப்புக்களில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளதாக மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது அக்கராயன் குளத்தின் கீழ் உள்ள 3ஆயிரத்து 417 ஏக்கரில் 2ஆயிரத்து 790 ஏக்கரும் இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள 21 ஆயிரத்து 985 ஏக்கரில் 15 ஆயிரம் ஏக்கரும் கல்மடுக்குளத்தின் கீழ் உள்ள 3 ஆயிரத்து 450 ஏக்கரில் ஆயிரத்து 346ஏக்கரும்கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் உள்ள ஆயிரத்து 505 ஏக்கரில் 500 ஏக்கரும் குடமுருட்டிக் குளத்தின் கீழ் உள்ள 650 ஏக்கரில் 322 ஏக்கரும் புதுமுறிப்பு குளத்தின் கீழ் உள்ள 985 ஏக்கரில் 850 ஏக்கரும் வன்னேரிக்குளத்தின் கீழ் உள்ள 360 ஏக்கரில் 123 ஏக்கரும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட அதே நேரம் அக்கராயன் குளத்தின் கீழ் 466 ஏக்கரும் இரணைமடுக் குளத்தின் கீழ் 500 ஏக்கரும் திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் 600 ஏக்கரும் கனகாம்பிகைக்குளத்தின் கீழ் 200 ஏக்கரும் பிரமந்தனாறுக் குளத்தின் கீழ் 450 ஏக்கரும் என 2216 ஏக்கரில் உப உணவுச் செய்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் அதாவது மேற்படி குளங்களின் கீழ் உள்ள 13 ஆயிரத்து 756.9 ஹெக்டேயர் நிலப்பரப்பில் 9ஆயிரத்து 367.3 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு அறுவடைகள் நிறைவு பெற்று அடுத்த போக பயிர்ச்செய்கைக்கான தயார்படுத்தல்களை விவசாயிகள் முன்னெடுத்து வருகின்றனர் என நீர்ப்பாசனத்திணைக் களத் தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.(9-315)




# அழிவடையும் நிலையில் மன்னார் தொங்கு பாலம்

(நெளுக்குளம்)



சுற்றுலாத்தளமாக விளங்கி வரும் மன்னார் குஞ்சுக்குளம் தொங்குபாலம் அதன் விசேட தன்மையை இழந்து வருவதுடன் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றது. குறித்த பாலம் நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனால் குறித்த பாலத்தை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் பாலத்தில் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் குஞ்சுக்குளம் தொங்குபாலம் பல வருட வரலாற்றைக் கொண்டுள்ளது. மன்னாரின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் தமிழ், சிங்கள, முஸ்லிம் சுற்றுலாப்பயணிகள் தமது குடும்பத்தினருடன் குஞ்சுக்குளம் தொங்கு பாலத்திற்குச் சென்று அங்குள்ள இயற்கை அழகுகளைப் பார்வையிட்டுச் செல்கின்றமை வழமை.

இந்நிலையில் தொங்கு பாலத்தில் நடப்பதற்காக அமைக்கப்பட்ட தகடுகள் நீண்டகாலமாக உடைந்து காணப்படுகின்றது. இதனால் அப்பாலத்தில் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் அருகே அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா மையம் பூட்டப்பட்டு, பணியாளர்கள் யாருமின்றி பராமரிப்பற்றுக் காணப்படுவதனால் இளைப்பாற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இச் சுற்றுலா மையமானது முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் 2014 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பூட்டப்பட்டுள்ளது.

எனவே பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள், மாணவர்கள், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் இவ்வாறான சுற்றுலாத் தளங்களை பராமரிப்பதும் அழிந்து செல்லும் சுற்றுலா மையங்களை அழகுபடுத்தி மாகாணத்திற்கு வருமானத்தைப் பெறும் வண்ணம் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுப்பதுடன், அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் இதற்கு பொறுப்பாகவுள்ள அதிகாரிகளின் கடமையாகும் என தெரிவிக்கும் சுற்றுலாப் பயணிகள் வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்தனர். (9-299)

# வவுனியாவில் இந்து சமய அறநெறிக் கொடி தினம் அனுஷ்டிப்பு







(குருமன்காடு)

தேசிய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாதத்தினை முன்னிட்டு இந்துசமய அறநெறிக்கல்விக் கொடி தினம் நேற்று வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்து சமய அறநெறிக் கல்வி யின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதம் மற்றும் இந்து சமய அறநெறிக் கல்வி - கொடி தினம் என்பன செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை "பூரணத்துவமான ஆளுமைப் பண்புக்கு அடிப்படை அறநெறிக் கல்வியே!" என்ற தொனிப் பொருளில் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் வெங்கலச் செட்டிகுளம் பஜார் வீதியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து பிரதேச செயலகம் வரை அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஊர்வ லம் இடம்பெற்றது.

பிரதேச செயலக முன்றலில் பிரதேச செயலாளர் கை.சிவகரனினால் நந்திக் கொடியேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அறநெறிக் கீதம் இடம்பெற்றதுடன் பிரதேச செயலாளரினால் அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய உரை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் கே.முகுந்தன், திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சண்முகநாதன், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவ.கஜேந்திரகுமார், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கி.சற்சுருவேணு, கலாசார உத்தி யோகத்தர் ரா.பிறிஸ்கா, அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள், ஆலய பரிபாலன சபையினர் கலந்து கொண்டிருந்தனர். (9-250)

## தீப்பற்றிய பேருந்து



(நெளுக்குளம்)

வவுனியா பம்பைமடு பகுதியில் தனியார் பேருந்து ஒன்று நேற்று முன்தினம் தீப்பிடித்து எரிந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் காலை செட்டிகுளத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பேருந்து பம்பைமடு பகுதியில் திடீரென ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

பேருந்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக பேருந்தின் எஞ்சின் பகுதியில் தீப்பிடித்துள்ளது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த பயணிகள் எவ்வித காயங்கள் இன்றி தெய்வாதீனமாக தப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (9-250-299)

# தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு எழுக தமிழ் மூலம் தெளிவான செய்தி வழங்கப்படும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு



(நெளுக்குளம்)

தெற்கிலே இருக்கக்கூடிய ஜனாதிபதி வேட்பாளர்களிற்கும் சரி, அல்லது தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றிகொண்டிருக்க கூடியவர்களிற்கும் சரி ஒரு தெளிவான செய்தியை எழுக தமிழ் மக்கள் எழுச்சி பேரணியூடாக வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

தமிழ்மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவை இரண்டு மாபெரும் மக்கள் பேரணியை நடத்தியிருக்கிறது. தமிழ் மக்களுக்கு நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு பேரவையால் தயாரிக்கப்பட்ட தீர்வு வரைபொன்றை அரசாங்கத்திற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கும் கையளிக்கப்பட்டிருக்கிறது.

பேரவையால் உருவாக்கப்பட்ட தீர்வு வரைபை அடியொற்றி வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் ஏகமனதாக மற்றொரு தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதுவும் அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலிலே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்ட விடயங்களை அடியொற்றியே இந்த தீர்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. எனவே தமிழ்மக்கள் சார்பில் பாராளுமன்றம் சென்றவர்கள் அவர்களால் முன் வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை நிறைவேற்றுவதற்கு பதிலாக இந்த நான்கரை வருடம் அரசாங்கத்தைப் பாதுகாத்துவிட்டு தற்போது ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் எங்களை ஏமாற்றி விட்டார்கள், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முதுகெலும்பு அவர்களிற்கு இல்லை என்று கூறி நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

அதன்பின்னரும் தற்போது நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படும் ஜனாதிபதி தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியில் ரணில் போட்டியிட்டால் என்ன, சஜித் போட்டியிட்டால் என்ன மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பின்னாலும், யானைக்குப் பின்னாலும் சென்று வாக்களிக்கும்படி தான் கேட்கிறார்கள்.

நாங்கள் நபர்களை நம்பி இனி மேலும் வாக்களிக்க முடியாது. தமிழ் மக்களுடைய அடிப்படை பிரச்சினைகளான காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நிரந்தரமான தீர்வினை வழங்குதல், வட கிழக்கில் தொல்பொருள் திணைக்களம் மற்றும் வன வளத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன், ஜனாதிபதி தேர்தலிலே தமிழ்மக்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்கவேண் டும் என்பது தொடர்பாகவும் தெற் கில் இருக்கக்கூடிய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் சரி அல்லது தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்க கூடியவர்களிற்கும் சரி ஒரு தெளிவான செய்தியை மக்கள் எழுச்சி பேரணியூடாக வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. (9-299)

# வெடுக்குநாறி மலை ஆலயத்தில் ஒலிபெருக்கி பயன்படுத்த அனுமதி

(நெளுக்குளம்)

நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதி இலிங்கேஸ்வரரின் வருடாந்த பொங்கல் விழா கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் பொங்கல் நிகழ்வின் முதல்நாள் அங்கு வருகை தந்த நெடுங்கேணி பொலிஸார் ஆலயத்தில் ஒலிபெருக்கி பாவனை மேற்கொள்ள வேண்டாம் என்று கண்டிப்பான உத்தரவை விதித்ததுடன், ஆலய வளாகத்தை துப்புரவாக்கியமைக்கும் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

இதே வேளை குறித்த ஆலயத்திற்கு செல்லும் பிரதான வீதியைப் புனரமைப்பதற்கும் பொலிஸார் தடை விதித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக நெடுங்கேணிப் பொலிஸாருக்கு ஆலயத்தின் நலன் விரும்பிகள் சார்பில் தொடர் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்ததுடன் வவுனியாவில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்திற்கு ஆலயத்தின் நிர்வாகம் சார்பில் கடந்த வெள்ளிக்கிழமை சென்று கோரிக்கை முன்வைக்கப்பட்டு, திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஆலயத்தில் ஒலிபெருக்கிப் பாவனையை மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு தொல்பொருள் திணைக்களத்தினால் நெடுங்கேணி பொலிஸாருக்கு கடந்த வெள்ளிக்கிழமை மாலை கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் நேற்று முன்தினம் காலை பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து அனுமதிக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்திற்கு நெடுங்கேணிப் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டிருந்தது. (9-299)

# நித்தகைக் குளத்தை புனரமைத்துத் தருமாறு குமுழமுனை விவசாயிகள் கோரிக்கை



முல்லைத்தீவு - குமுழமுனை கிழக்கு கமக்கார அமைப்பின் பிரிவிற்குட்பட்ட, பாரிய நீர்ப்பாசனக் குளமாக நித்தகைக் குளத்தினை சீரமைத்துத் தருமாறு குமுழமுனை பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்தாண்டு பெய்த கனமழை காரணமாக உடைப்பெடுத்த இக்குளத்தினை, சீரமைத்துத் தருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் பல தடவைகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை சீரமைத்துத் தரப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நித்தகைக்குளம் நீண்ட காலமாக உடைப்பெடுத்திருந்த நிலையில், கடந்த 2018ஆம் ஆண்டு சீரமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்தாண்டு பெய்த கனமழை காரணமாக மீண்டும் குறித்த நித்தகைக் குளம் உடைப்பெடுத்திருந்தது.

இதனால் குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த பகுதிகள் அனைத்தும் நீரில் மூழ்கியதுடன், பயிர்கள் அனைத்தும் முற்றாக அழிவுற்றிருந்தன.

இந்நிலையில் விரைவில் சீரமைத்துத் தருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் கூறப்பட்டபோதிலும் இதுவரை சீரமைத்துத் தரப்படவில்லை.

மீண்டும் குளத்தினை சீரமைப்பதற்கென நீர்ப்பாசன பொறியியலாளர்களால் குளம் அளவீடும் செய்யப்பட்டிருந்தது.

தற்பொழுதும் விவசாயிகள், குறித்த குளத்தின் கீழான வயல் வெளியைப் பண்படுத்திவிட்டு, மானாவாரி பெரும்போகச் செய்கையில் ஈடுபடுவதற்காக காத்திருக்கின்றனர்.

எனவே இக்குளம் சீரமைக்கப்பட்டால், பெருந்தொகையான விவசாய நிலங்களுக்கு நீரினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருக்கும். அதனை விட, சிறுபோக நெற்பயிர்ச் செய்கையினைக்கூட எம்மால் மேற்கொள்ளக்கூடியதாகவிருக்கும்.

குமுழமுனையினையில்வாழும் மக்களைப் பொறுத்தவரையில், கால்நடை மற்றும் விவசாயத்தினை நம்பியே வாழ்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக இக் குளத்தினை சீரமைத்து, எமது வாழ்வாதாரத்தினை முன்னேற்ற உதவ வேண்டும் எனக்கேட்டுக் கொண்டுள்ளனர். (9)



பெண் சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்களின் உற்பத்திப்பொருட்களின் கண்காட்சி நேற்று கிளிநொச்சி சேவை சந்தை வளாகத்தில் இடம்பெற்றது. கரைச்சி, பூநகரி பிரதேசத்தில் பெண் கைத்தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனையும் செய்யப்பட்டது.

# வவு.தனியார் பேருந்து உரிமையாளர் சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(நெளுக்குளம்)

வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 21 ஆவது ஆண்டு பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் சங்கத்தின் தலைவர் ரி.கே.இராஜேஸ்வரன் தலைமையில் வவுனியா றோயல் கார்டின் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், செ.மயூரன், அரச அதிபர் எம்.கனீபா, நகரசபை உறுப்பினர்களான க.சந்திரகுலசிங்கம், சு.காண்டீபன், வர்த்தக சங்கத் தலைவர் ச.சுஜன், முச்சக்கரவண்டி சங்கத் தலைவர் ரவீந்திரன், சாரதிகள், பேருந்து உரிமையாளர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து சங்கம் உருவாகுவதற்கு உறுதுணையாக இருந்த முன்னாள் வவுனியா மாவட்ட அரச அதிபர் க.கணேசுக்கு ஒரு நிமிட மௌன பிரார்த்தனையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அத்துடன் விசேட தேவைக்குட்பட்டோர் மற்றும் சாரதியாகப் பணியாற்றி உயிரிழந்தவர்களின் பெற்றோர்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கி வைக்கப் பட்டது. தலைவராக ரி.கே.இராஜேஸ்வரன், செயலாளராக கே.சிவஞானமூர்த்தி, பொருளாளராக சஞ்சீவலிங்கம், உப தலைவராக எம்.விஜயரட்ணம், உப செயலாளராக காமாராஜாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (9-299)




'பிரதமர் மோடியின் வார்த்தைகள் ஊக்கமளித்துள்ளன'

# சந்திரயான்-2 விண்கலத்திட்டம் 100 சதவீதம் வெற்றியடையும்

## இஸ்ரோ தலைவர் சிவன் நம்பிக்கை

விக்ரம் லேண்டருடன் அடுத்த 14 நாட்களில் தொடர்பினை மேற்கொள்ள முயற்சிப்போம் என இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்ததுடன் அத்துடன் ஆர்பிட்டர் கருவி சிறப்பாக செயற்படுவதாகவும் இதனால் சந்திரயான் 2 திட்டம் 100 சதவீதம் வெற்றியளிக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டனர்.

சந்திரயான் 2 விண்கலம் நிலவில் தரையிறங்குவதற்கு 2.1 கிலோமீற்றர் தூர இடைவெளியில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்து பின்னடைவை சந்தித்திருந்த நிலையில் அவர் குறித்த கருத்தை வெளியிட்டார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், "விக்ரம் லேண்டருடன் தகவல் தொடர்பை இழந்த ஆர்பிட்டர் கருவி சிறப்பாக செயற்பட்டு நிலவில் இருந்து 100 கிலோமீற்றர் தொலைவில் சுற்றி வலம் வருகிறது.

இந்த ஆர்பிட்டர் கருவி ஒரு வருடகால பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டது. ஆனால் தற்போது அதில் எரிபொருள் அதிகமாக இருப்பதால் சுமார் ஏழரையாண்டுகள் வரை செயற்படும். இதனால், சந்திரயான்-2 திட்டம் கிட்டத்தட்ட வெற்றியடைந்துள்ளது.

பிரதமர் மோடி 'அறிவியலில் எப்போதும் முடிவுகளை தேடக் கூடாது. அனுபவங்களை தேட வேண்டும். அந்த அனுபவங்கள் முடிவுகளை அளிக்கும்' என கூறிய வார்த்தைகள் எங்களுக்கு மிகுந்த ஊக்கத்தை அளித்துள்ளது" என மேலும் தெரிவித்தார். (ஐ-2)

# டொரியன் கோர உயிரிழப்பு 45

## மீட்புப் பணிகள் தீவிரம்

(மார்ஷ் ஹார்பர்)

பகாமாஸ் நாட்டில் டொரியன் புயல் பாதிப்பினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்ந்துள்ளது.

கரிபியன் பகுதிகளில் மையம் கொண்டிருந்த டொரியன் புயல் கடந்த வாரம் போர்டோ ரிகோ, வெர்ஜின் தீவுகளைக் கடந்து கடந்த வார இறுதியில் பகாமாஸ் நாட்டைக் கடுமையாக தாக்கியது. இதன் காரணமாக நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள தீவுகளில் இரண்டு நாட்கள் பலத்த காற்றுடன் தொடர்ந்து கனமழை பெய்து பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. ஏராளமான குடியிருப்புகள் இடிந்து விழுந்தன. வீடு மற்றும் உடைமைகளை இழந்து பாதிக்கப்பட்ட மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் இல்லாமல் தவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வரும் நிலையில் புயல் மழைக்கு பலியானோரின் எண்ணிக்கை 45 ஆக

# ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு ஆறு பேர் பரிதாபமாக மரணம்



குஜராத் மாநிலத்தில் விநாயகர் சிலையை கரைத்த பின்னர் குளிக்கும்போது ஆற்றில் அடித்து செல்லப்பட்டு 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இவ்வாறு ஆற்றில் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த ஆறு பேரும் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அவர்கள் சடலமாக கண்டெடுக்கப்பட்டனர்.

குஜராத்தின் ஆரவல்லி மாவட்டத்தில் உள்ள ஹடோல் கிராமத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சிலையை கடந்த வெள்ளிக்கிழமை மாலையில் கிராமத்தினர் இணைந்து அருகில் உள்ள வட்ரக் ஆற்றில் கரைக்க கொண்டு சென்றனர். சிலையைக் கரைத்த பின்னர் அனைவரும் ஆற்றில் குளித்தனர்.

அப்போது ஆற்றின் ஆழமான பகுதிக்குச் சென்று குளித்துக் கொண்டிருந்த 6 பேர் திடீரென தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இதுகுறித்து தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்புக் குழுவினர் காணாமல் போனவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட 6 பேரின் உடல்களையும் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளதாக மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். (ஐ-2)

# ஏமன் பிரிவினைவாதி

## சவுதி அரேபியா கடும் எ

(சனா)



ஏமனின் தெற்கின் முக்கிய பகுதிகளை கைப்பற்றியுள்ள ஐக்கிய அரபு அமீரகம் ஆதரவு பிரிவினைவாதிகளுக்கு சவுதி அரேபியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமனில், ஜனாதிபதி மன்சூர் ஹாடி தலைமையிலான அரச படைக்கும், ஹவுதி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015 மார்ச் முதல் உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகின்றது. ஏமன் உள்நாட்டுப் போரில் ஹவுதி

# அமேசன் காட்டுத் தீ எதிரொலி ஏழு நாடுகள் வனப்பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்து



(பிரேசில்)

அமேசன் மழைக்காடுகளில் ஏற்பட்ட மோசமான தீயை அடுத்து ஏழு தென் அமெரிக்க நாடுகள் ஒன்றிணைந்து வனப் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. பொலிவியா, பிரேசில், கொலம்பியா, ஈக்குவடோர், கயானா, பெரு மற்றும் சூரினாம் ஆகிய நாடுகளே இவ்வாறு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.

செய்மதி தொழில் நுட்பம் ஊடாக காட்டுப்பகுதியை கண்காணித்து அனர்த்த நிலைமைகள் தொடர்பிலான பொறுப்பான வலையமைப்பை நிறுவுவதே இந்த நாடுகளின் முக்கிய நோக்கமாகும்.

மீளக்காடாக்கல் தொடர்பிலான விடயத்திற்கும் குறித்த ஏழு நாடுகள் கம்போடியாவில் இடம்பெற்ற மாநாட்டில் இணங்கியுள்ளன. இந்த மாநாட்டில் பேசிய கம்போடிய ஜனாதிபதி, 'அமேசன் மழைக்காடுகளைப் பாதுகாக்க நாட்டுத் தலைவர்களுக்கிடையே இணைந்த பொறிமுறை ஒன்றை உருவாக்குவதே இந்தச் சந்திப்பின் நோக்கம்' எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பெரு ஜனாதிபதி, 'அமேசனைக் காப்பதற்கு நாடுகளுக்கு இடையிலான நல்லெண்ணம் மட்டும் போதுமானதாக அமையாது. இணைந்த செயற்றிட்டங்களும் அவசியம்' எனத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு மாத்திரம் அமேசன் மழைக்காடுகளில் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தீப்பரவல்கள் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# காட்டுத்தீயால் அடையாளம் காணப்பட்ட அமேசனின் மிகவும் உயரமான மரங்கள்

(பிரேசில்)

காட்டுத்தீயால் அடையாளம் காணப்பட்ட அமேசனின் 'உயரமான மரம்' அடையாளம் காணப்பட்டுள்ளது.

அமேசனின் மிகவும் உயரமான மரம் குறித்த விபரங்களை பிரேசில் மற்றும் பிரித்தானிய அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

அமேசன் காடுகளில் தொடர்ந்தும் பயங்கரமான காட்டுத்தீ ஏற்பட்டு பல அழிவுகளை ஏற்படுத்தி வருகின்ற நிலையில், இதில் பல்லாயிரக்கணக்கான மரங்களும், பறவைகளும், விலங்குகளும் உயிரிழந்தன. ஆனால், இந்தக் காட்டுத்தீயில் எவ்வித சேதாரத்தையும் சந்திக்காமல் சில மரங்கள் இருந்துள்ளன.

அவை மிகவும் உயரமாக இருக்கும் காரணத்தினாலே இந்தக் குறிப்பிட்ட ரக மரங்கள் காட்டுத்தீ இற்கு இரையாகாமல் இருந்துள்ளன.

அந்தவகையில் டினிஜியா எக்செல்சா (Dinizia Excelsa) என்ற மர வகைகள் மிகவும் உயரமானதாக இருந்ததால் காட்டுத்தீயால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. எனினும் காட்டுத்தீயால் காடு முற்றிலும் சேதமானதால் இந்த மரங்கள் தனியாகத் தெரிந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து பிரேசில் மற்றும் பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில் இந்த Dinizia Excelsa ரக மரங்களே அமேசனின் மிகவும் உயரமான மரங்கள் என்ற புதிய கண்டுபிடிப்பு நிகழ்ந்துள்ளது. இவ்வகை மரங்கள் 288 அடி உயரம் கொண்டுள்ளதுடன் அதன் சுற்றளவு 5.50 மீற்றராகும்.

உலகின் மிகவும் உயரமான மரங் கலிபோர்னியா ரெட்வுட் மரங்களாகும். இந்த மரத்தின் உயரம் 379.3 அடியாகும். எனினும் மரத்தின் மேற்பகுதியில் மரங்கொத்திகளால் ஏற்பட்ட சேதத்தினால் இம்மரம் மேலும் உயரமாக வளராமல் போயிருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (ஐ-2)

# வெளிநாடு

## ...ரத்தாண்டவம்
## ...5 ஆக உயர்வு



உயர்ந்துள்ளது. மேலும், சிலரைக் காண வில்லை. எனவே, பலி எண் ணிக்கை மேலும் உயரலாம் என்றும் அஞ்சப்படுகிறது. (ஜ-2)

## ...திகளுக்கு
## ... எச்சரிக்கை



கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவுதி அரேபியாவும், ஐக்கிய அரபு அமீரகமும் கூட்டாக செயற்பட்டுவருகின்றன. இந்நிலையிலேயே அமீரக ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகளுக்கு சவுதி அரேபியா நேரடி எச்சரிக்கை விடுத்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இதுகுறித்து சவுதி அரசின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் இதனைத் தெரிவித்தது.

அதில், ஏமனின் ஸ்திரத்தன்மையை இல்லாமல் செய்வதற்கு யார் சதி செய்தாலும், அதைச் சவுதி அரேபியாவின் பாதுகாப்புக்கும், ஸ்திரத்தன்மைக்கும் ஏற்பட்ட அச்சுறுத்தலாகவே கருதுகிறோம். வேறு படைகளைப் பயன்படுத்தியோ, மிரட்டியோ இந்த நிலையை மாற்றியமைக்க முயற்சிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அந்தச் செய்தி எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஜ-2)

ஐ.எஸ்.அமைப்புடன் தொடர்பு

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் புலனாய்வுப் பிரிவால் சுட்டுப்படுகொலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் சி.ஐ.ஏயின், ஆதரவுடன் செயற்படும் புலனாய்வு குழுவொன்றினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சகோதாரர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஜலலாபாத்தில் உள்ள சிபாதுல்ல என்ற பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப்துல் காதர் சித்தீக், அப்துல் காதீர் பகார் ஜெகான்சீப் ஜாகீல் வால் சபூர் சாஹீல்வால் ஆகிய சகோதரர்களே சி.ஐ.ஏயின் ஆதரவுடன் இயங்கும் 02 யுனிட் எனப்படும் புலனாய்வுப் பிரிவினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட சகோதரர்களுக்கு ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பிருந்தது என அதிகாரிகள் தெரிவித்துள்ளதை உறவினர்கள் மறுத்துள்ளதுடன் இந்தக் கொலைகள் குறித்து நாங்கள் அதிர்ச்சியடைந்துள்ளோம். அரசாங்கத்தின் மீதும் படையினர் மீதும் நம்பிக்கை இழந்துவிட்டோம் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கொலைகள் யுத்த குற்றங்களிற்கு சமமானவை என ஆப்கானிஸ்தானின் முன்னாள் நிதியமைச்சர் ஒமார் ஜஹில்வால் சுட்டிக்காட்டிய இதேவேளை இந்தப் படுகொலைகள் குறித்து கடும் எதிர்ப்பு எழுந்துள்ளதை தொடர்ந்து ஆப்கானிஸ்தானின் தேசிய புலனாய்வுப் பணியக இயக்குநர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

பொதுமக்கள் கொல்லப்படுவதை ஏற்க முடியாது என குறிப்பிட்டுள்ள ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஸ்ரவ் கானி பதவி விலகலை ஏற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ஆப்கானிஸ்தானில் இராணுவத் தாக்குதல்
## 12 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் வடபகுதியில் அமைந்துள்ளது பால்க் மாவட்டம். இந்த மாவட்டத்தில் பதுங்கியுள்ள தலிபான் பயங்கரவாதிகளைக் குறிவைத்து ராணுவத்தினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அங்குள்ள சாம்டால் மாவட்டத்தில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 12 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் 17 பேர் படுகாயம் அடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஜ-2)


17 பேர் படுகாயம்



## கலிபோர்னியா படகில் தீ விபத்து!
## இந்திய விஞ்ஞானி உட்பட 34 பேர் பலி

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள சன்டா குரூஸ் தீவுப்பகுதியில் உள்ள கடலில் ஸ்கூபா டைவிங் நீச்சல் செய்வதற்கான நிகழ்ச்சி மூன்று நாட்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக ஒரு குழுவினர் அந்தத் தீவினை சுற்றியுள்ள கடல் பகுதிக்கு படகில் சென்றனர். சன்டாகுரூஸ் தீவு அருகே நிறுத்தப்பட்டிருந்த அந்த படகு கடந்த திங்கட்கிழமையன்று திடீரென தீப்பிடித்து மூழ்கியது.



நீச்சல் குழுவினர் படகில் தூங்கிக்கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக படகில் தீவிபத்து ஏற்பட்டது. இதனால், பயணிகள் 33 பேர், ஊழியர்கள் 6 பேர் என படகில் இருந்த 39 பேரும் சிக்கிக்கொண்டனர். இதில், 5 ஊழியர்கள் மட்டும் படகின் மேற்பகுதியில் தூங்கியதால் வெளியே குதித்து உயிர்தப்பினர். மற்ற 34 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், படகு விபத்தில் இந்தியாவைச் சேர்ந்த தம்பதியருடன் இந்திய வம்சாவளி விஞ்ஞானியும் உயிரிழந்திருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளன. (ஜ-2)

## 23 பேரை பலிகொண்ட தேவாலயத் தாக்குதலை நடத்தியது இந்தோனேசியத் தம்பதியினர் மரபணுப் பரிசோதனையில் தகவல்



(ஜகார்த்தா)

பிலிப்பைன்சில் பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியது, இந்தோனேசிய நாட்டைச் சேர்ந்த தம்பதியர் என்று மரபணு பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள சூலு மாகாணத்தின் தலைநகர் ஜோலோவில், கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழக்கமான வழிபாடு நடந்து கொண்டிருந்தது.

அப்போது பலத்த சத்தத்துடன் அங்கு குண்டு வெடித்தது. வழிபாட்டில் கலந்து கொண்டவர்கள் அதிர்ந்துபோய் நாலாபக்கமும் ஓட்டம் எடுத்தனர். எனினும் இந்தக் குண்டுவெடிப்பில் சிக்கி 23 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 102 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்தக் கொடூர சம்பவம், அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதலை நடத்தியது, இந்தோனேசிய நாட்டைச் சேர்ந்த தம்பதியர் என்று மரபணு பரிசோதனையில் தெரிய வந்துள்ளது. இதை இந்தோனேசிய பொலிஸார் உறுதி செய்தனர்.

தாக்குதல் நடத்திய தம்பதியர், ரூல்லி ரியான் ஜேக்கே, அவரது மனைவி உல்பா ஹண்டயானி சலே ஆவார்கள்.

இவர்கள், ஜமா அன்ஷரட் தவுலா என்ற உள்நாட்டு பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர்கள் என தகவல்கள் தெரிவித்தன. (ஜ-2)

# வீதியில் நின்ற கப் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து

## கால்கள் முறிந்த நிலையில் ஒருவர் வைத்தியசாலையில்



(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் சந்திக்கருகில் தரித்து நின்ற கப் ரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

நேற்றுக்காலை இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றது.

யாழ்.பலாலி வீதி உரும்பிராய் சந்திக்கு அருகில் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து வீதியின் அருகே நிறுத்தப்பட்டிருந்த கப் ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் கால்கள் முறிந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-2-10)

# இலங்கையில் மீண்டும் பயங்கரத் தாக்குதல்கள்

## ஞானசார தேரர் எச்சரிக்கை


(எம்பிலிப்பிட்டிய)

**இலங்கையில் மீண்டும் எதிர்பாராத நேரத்தில் பயங்கரத் தாக்குதல்கள் நடத்தப்பட வாய்ப்புக்கள் உள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் எச்சரித்தார்.**

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கடந்த வாரம் மாவனெல்ல பிரதேசத்தில் புத்தர் சிலைகள் உடைக்க தலைமைத்துவம் வழங்கிய மௌலவி கைது செய்யப்பட்டார்.

அவர் வழங்கிய தகவலுக்கு அமைய இலங்கையில் 9 மாகாணங்களில் தாக்குதல்கள் மேற்கொள்வதற்கு திட்டமிருந்ததாக செய்தி வெளியாகியுள்ளது.



2027ஆம் ஆண்டில் இந்த நாட்டை பிடிக்க சில சக்திகள் திட்டமிட்டுள்ளன. அதற்காக இந்த 9 தாக்குதல்களும் மேற்கொள்ளப்படும்.

அது மாத்திரமின்றி மேலும் பல தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட வாய்ப்புக்கள் உள்ளன.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இந்த தாக்குதல்களை நிறுத்தி விடும் என நான் நினைக்கவில்லை. ஏன் என்றால், அவர்கள் நாட்டிற்குள் கும்பலமாக உள்ளனர். அதற்கமைய எதிர்பாராத இரண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால், அது சஹ்ரானின் தாக்குதல்கள் போன்றிருக்கும்.

அப்படித்தாக்குதல் மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் உள்ளது. பல பில்லியன் டொலர் பணம் நாட்டிற்குள் வந்துள்ளது. அந்த பணம் எப்படி வந்ததென தெரியவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவின் 'உத்தர தேவி' நூல் மகிந்த,கோத்தாவிடம்



(கொழும்பு)

மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன எழுதிய 'உத்தர தேவி என்ற நூல், வெளியிடப்பட்டது. பிசப் கல்லூரி அரங்கில் கடந்த 6ஆம் திகதி நடந்த இந்த நிகழ்வில், 'உத்தர தேவி' சிங்கள நூலின் முதல் பிரதியை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வில் பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அரசியல் பிரமுகர்கள், முன்னாள் படை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன, ஓய்வுபெற்ற பின்னர் 'நந்திக் கடலுக்கான பாதை' நூலை எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உணர்வுகள் பத்து!

"சேர்! அன்றைக்கு உங்களிடம் ஹொம்ப உணர்ச்சிவசப்பட்டு பேசிப்போட்டன். அதை ஒன்றும் பெரிசா எடுக்காதீர்கள்" என்றார் ஒருத்தர். "நீங்கள் உணர்ச்சிவசப்படுவதே ரொம்ப அபூர்வம்"என்றார். " என்ன அப்படிச் சொல்கிறீர்கள்" என்றார்.

"உங்களை உணர்ச்சியில்லாத மரக்கட்டை என்று தானே நம்ம நண்பர்கள் சொல்கிறது வழக்கம்'' என்றேன். ''அட போங்க சேர்'' என்று மறுபடியும் உணர்ச்சிவசப்பட ஆரம்பித்தார் அவர்.

மனிதனுக்கு ஏற்படுகிற உணர்வுகள் (Emotion) இருக்கே அதிலே சில நல்லது செய்யும் (Positive emotion), சில தொந்தரவு செய்யும். (Destuctive emotion) ஆக இது (emotion) இரண்டு வகை. ஒன்று நல்லது. இன்னொன்று கெட்டது.

இப்ப உதாரணத்திற்கு கோபம் நோயை உண்டாக்கும். சிரிப்பு நோயை குணப்படுத்தும்.உணர்வுகள் இல்லாமல் மனிதன் சந்தோசமாக இருக்க முடியாது. நம்ம வாழ்க்கையை ஆட்சி செய்யிறதே அதுதான்.

நீங்கள் உங்கள் வாழ்க்கையிலே சந்தோசமாக இருக்கப் போகிறீர்களா? இல்லையா? என்பதை முடிவு செய்யிறது உங்கள் (emotion) தான். உங்கள் (Personality) எப்படி என்பதை முடிவு செய்யிறது அதுதான். எல்லாத்தையும் விட உங்கள் உடல் நலத்தை (Health) நிர்ணயம் செய்யிறதும் அதுதான்.

மொத்தம் 10 அடிப்படையான உணர்ச்சிகள் உண்டு. அதிலே 5 மோசமானது. 5 நல்லவிதமானது. மோசமான உணர்ச்சிகளை எப்படி கன்ட்ரோல் செய்வது, நல்லவிதமான உணர்ச்சிகளை எப்படி வலுப்படுத்துறது? அதுதான் இன்றைக் குத் தகவல்.

மோசமான உணர்ச்சிகள்: (Destuctive emotion) எது எது தெரியுமா? கோபம், குற்ற உணர்வு, பயம், சலிப்பு, துக்கம் அதாவது Anger, Guilt, Fear, Boredom, Sadness. நல்லவிதமான உணர்ச்சிகள்: சிரிப்பு, அன்பு, ஆக்கபூர்வமான எதிர்பார்ப்பு, நம்பிக்கை, தன்னம்பிக்கை. அதாவது Laughter, Love, Hope, Optimism, Self,Confidence.

முன்னர் சொன்ன 5 உம் உடம்புக்குக் கெடுதல். பின்னர் சொன்ன 5 உம் உடம்புக்கு நல்லது. இப்ப ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலில் கோபம்–Anger. இது இருதய நோயை உண்டாக்கும். கோபத்தை அடக்கிறபோது B.P ஏறுகிறது. Heart attack, Stroke எல்லாம் வருகிறது. வயிற்றிலே அல்சர் வருகுது.

எந்தக் காரணத்தினாலே கோபம் வந்தாலும் சரி...அது மனதையும் கெடுக்கும். உடம்பையும் கெடுக்கும்.

உங்களுக்குக்கோபம் வந்தா முதலிலே அது நியாயமான கோபம் தான் என்பதை கொஞ்சம் நிதானமாக யோசித்து முடிவு செய்யுங்க. இரண்டாவது குற்ற உணர்வு–Guilt ஒரு தப்புச் செய்தா அல்லது ஒரு காரியத்தை செய்யத் தவறினா அதை நினைத்து வருத்தப்படுகிறோம். தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வதும் தவறு செய்யாமல் இருக்க பழகிக்கொள்வதும் தான் இதற்கு சரியான வழி.

மூன்றாவது பயம்–Fear எது எதுக்குத்தான் பயப்படுகிறது என்று இல்லை. எல்லாத்துக்கும் பயப்படுகிறோம். எல்லாருக்கும் பொதுவான ஒரு பயம். நாமும் நம்ம உடம்பும் நல்லா இருக்க வேண்டும் என்ற பயம்தான். பயத்துக்கான மூல காரணத்தை கண்டு பிடிக்க வேண்டும். பின்பு அதை விலக்க வேண்டும்.

நாலாவது சலிப்பு–Boredom சில பேருக்கு நேரம் கிடைக்கவில்லை என்பது ஒரு பெரிய குறையா இருக்கும். ஆனால் சில பேருக்கு நேரம் இருக்கும். என்ன செய்கிறதென்று தெரியாது. இது மிகவும் ஆபத்தானது.

இதனாலே இதய நோய், செரிமானக் கோளாறு, தோல் தொல்லைகள், மனத்தளர்ச்சி எல்லாம் ஏற்படும். உங்களுக்கென்று ஒரு பொழுதுபோக்கு அல்லது வேலையை நீங்கதான் உண்டாக்க வேண்டும்.

ஐந்தாவது துன்பம் அல்லது துக்கம் Sadnes. மனிதன் வருத்தப்படுவதற்கு எத்தனையோ காரணம் இருக்கு. துக்கத்தைக் கண்டு பயந்தால் அது அதிகமாகுமே தவிர குறையாது.

துயரத்தை மனசுக்குள்ளே தேக்கி வைக்கக்கூடாது. தாங்க முடியவில்லை யென்றால் அழுதுவிடுவது நல்லது. இதுவரைக்கும் சொன்னதெல்லாம் கெடுதல் செய்கிற உணர்வுகள் எது எது தெரியுமா?

சிரிப்பு (களிப்பு Laughter) :இது நுரையீரலுக்கும் இதயத்துக்கும் நல்ல பயிற்சி. சிரித்ததுக்கப்புறம் பார்த்தீர்களென்றால் B.P குறையும். மூச்சு விடுவது சுலபமா இருக்கும். நல்லா தூக்கம் வரும். அன்பு (Love) பல வியாதிகளை குணப்படுத்தும். நல்லவிதமான எதிர்பார்ப்பு இருக்கு. (hope) அது வாழ்க்கையிலே ரொம்ப முக்கியம். வாழ்க்கையிலே ஒரு purpose இல்லையென்றால் அது பிரயோசனப்படாது.


நம்பிக்கை ரொம்ப அவசியம் (optimism)நான் எங்கே உருப்படப் போகிறேன் என்று நினைக்கிறவர்கள் உருப்படுவதே இல்லை. தன்னம்பிக்கையும் (self confidence) ஒரு ஆக்கபூர்வமான உணர்வு. தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் உங்க (health improve) ஆகும்.


ஆகக்கூடிய 10 விதமான emotion பற்றி தெரிந்து கொண்டோம். அதனாலே இனிமேல் நீங்க உணர்ச்சிவசப்படுகிறதுக்கு முன்னர் ஒருகணம் யோசித்து பார்த்துக்கொள்ளுங்கள் (positive emotion desctrective emotion) என்று ஒரு பேச்சாளர் ஒரு கூட்டத்திலே வீராவேசமாகப் பேசிக்கொண்டிருந்தார். கடைசி கட்டத்திலே உணர்ச்சி வசப்பட்டு அழுது விட்டார்.

கூட்டம் முடிந்ததும் ஏன் சேர் அப்படி அழுதனீர்கள் என்று கேட்டேன். "நான் பேசி முடிக்கிறபோது எதிரிலே உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. எல்லோரும் எழுந்து போய்விட்டார்கள் சேர். அதுதான் உணர்ச்சிவசப்பட்டு அழுதுவிட்டேன்'' என்றார். இந்த (emotion) எந்த ரகத்திலே சேர்க்கிறது.

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவதாக கூறவில்லை

## கபீர் ஹாசிம் விளக்கம்





(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகத் தான் களமிறங்கப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் முக்கியஸ்தர்களின் சந்திப்பின் போது குறிப்பிட வில்லை. தேர்தலை வெற்றி கொள்வதற்கான அனைத்துத் திட்டங்களும் வகுக்கப்பட்டன. விரைவில் மக்கள் எதிர்பார்க்கும் வேட்பாளரை உத்தியோகபூர்வமாக அறிவிப்போம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் முக்கியஸ்தர்கள் கூட்டம் இடம்பெற்றது.


இதன்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கப் போவதாக பிரதமர் குறிப்பிட வில்லை.

ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்வதற்கான சகல திட்டங்களும் வகுக்கப்பட்டன. வேட்பாளரை அறிவிப்பது மாத்திரமே எஞ்சியுள்ளது. மக்கள் எதிர்பார்க்கும் ஒருவரை வெகு விரைவில் வேட்பாளராக அறிவிப்போம்.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து எந்த உடன்பாடும் இதுவரை எடுக்கப்படவில்லை. அவ்வாறு பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்படவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டிருக்குமாக இருந்தால் அது பொய்யான தகவலாகும். அதற்கு மாறாக அமைச்சர் சஜித் பிரேததாஸவை ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யுமாறு கட்சியின் பெரும்பான்மையானவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

ஜனநாயகத்தை பின்பற்றி சமத்துவத்தை பேணும் கட்சி என்ற வகையில் வெகுவிரைவில் எங்களின் வேட்பாளரை அறிவிப்போம். பல்வேறு நெருக்கடிகளில் சகலரும் கட்சியை பாதுகாத்தார்கள். விரைவில் மக்கள் எதிர்பார்க்கும் வேட்பாளர் ஒருவரை அறிவித்து நாட்டின் முன்னேற்றத்துக்காக செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு!




கடந்த ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் பின்னர் வீழ்ச்சியடைந்த சுற்றுலாப் பயணிகளின் வருகையானது தற்போது படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இலங்கை சுற்றுலா அபிவிரு த்தி அதிகார சபையின் தரவு களை அடிப்படையாகக் கொண்டு கடந்த ஏப்ரல் மாதம் 166, 975 சுற்றுலாப் பயணிகள் இலங்கை க்கு வருகை தந்துள்ளனர்.

அதன் பின்னர் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து சுற்றுலாப் பயணிகளின் வருகை பாரியளவில் வீழ்ச்சியை சந்தித்தது. குறிப்பாக ஏப்ரல் மாதம் 37,802 சுற்றுலாப் பயணிகளும் ஜூன் மாதம் 63,072 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

இதன் பின்னர் இலங்கையின் பாதுகாப்பானது உறுதிப்படுத்தப்பட்டதற்கு அமைவாக ஜூலை மாதம் முதல் சுற்றுலாப் பயணிகளின் வருகை படிப்படியாக அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. அதன்படி ஜூலை மாதம் 115,701 சுற்றுலாப் பயணிகளும் ஒகஸ்ட் மாதம் 143,587 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. (ஐ)

# பிரதமர் ரணில் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்வார்

## இராதாகிருஷ்ணன் நம்பிக்கை

(தலவாக்கலை)

இலங்கையில் தேர்ச்சி பெற்ற அனுபவம் மிக்க அரசியல்வாதிகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர். அவர் என்றும் மக்கள் பக்கம் இருந்தே முடிவுகளை எடுத்திருக்கின்றார். ஜனாதிபதித்தேர்தலில் அவர் விட்டுக்கொடுப்பு செய்வதன் மூலம் அவருடைய நிலை உயர்வடையுமே தவிர கீழ் இறங்காது.

இந்த விட்டுக் கொடுப்பின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியும் பாதுகாக்கப்படும். இந்த விட்டுக் கொடுப்பை செய்து சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்வார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதையே மலையக மக்களும் எதிர்பார்க்கின்றார்கள் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு




கூட்டணியின் பிரதித் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தலவாக்கலை லோகி தோட்டத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 19 குடும்பங்களுக்கு விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சின் மூலமாக வீடுகளுகளுக்கான சமயலறை பொருட்களும் அத்தியாவசிய பொருட்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இந்நிகழ்வின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் பதலளிக்கும் போது இன்று ஜனாதிபதித் தேர்தல், ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு எல்லாம் உச்ச கட்டத்தில் இருக்கின்றது. இரண்டு கட்சிகள் வேட்பாளர்களை அறிவித்திருக்கின்ற நிலையில் பிரதான அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் வேட்பாளரை அறிவிக்க வில்லை.

இவ்வாறான ஒரு நிலையில் சஜித் பிரேமதாஸ மக்கள் ஆதரவு கூட்டங்களை நடத்தி வருகின்றார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தான் போட்டியிடுவார் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.

எனவே இவற்றை கருத்தில் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சரியான முடிவை எடுப்பார் என ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் எதிர்பார்க்கின்றனர். பங்காளிக் கட்சிகளும் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டில் இருப்பதை ஊடகங்கள் வாய்லாக அறிய முடிகின்றது.

இந்த விட்டு கொடுப்பை செய்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாஸவை ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்து நீண்ட காலத்தின் பின் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்த ஒருவர் ஜனாதிபதியாக வரக்கூடிய நிலைமையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்துவார் என அனைவரும் எதிர்பார்க்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று பல்வேறு விமர்சனங்கள் எழுந்து வருகின்றன. அதற்கு காரணம் நாங்கள் அதிகமாக சேவை செய்து வருகின்றோம். நாங்கள் விமர்சனங்களை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் அந்த விமர்சனங்கள் ஆரோக்கியமானதாகவும் காத்திரமானாதாகவும் இருக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரித்தார். (இ-7)



யாழில் இடம்பெற்றுவரும் Enterprise Sri Lanka கண்காட்சிக்கு நேற்று முற்பகல் விஜயம் செய்த ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அங்கு வருகைதந்த மாணவர்கள் மற்றும் பொதுமக்களுடனும் சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் வருகை தந்த சிலருக்கு ஜனாதிபதி செயலகத்தின் உணவு உற்பத்தி பிரிவினால் வழங்கப்படும் மரக்கன்றுகளையும் வழங்கினார்.

இதேவேளை ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பு பணிப்பாளர் பாரத தென்னக்கோன் ஆளுநருக்கும் மா மரக்கன்று ஒன்றை வழங்கினார்.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையும் கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்களும்



12

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலம் வேட்பாளராக நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்தார். இந்த அடிப்படையில் நோக்கும் போது ஜனாப் அப்துல் றசூல் ஜனாதிபதித் தேர்தலொன்றில் போட்டியிட்ட இரண்டாவது சிறுபான்மை அபேட்சகராகின்றார்.

4 ஆவது ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் 1999.12.18 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடையவிருந்தன. இச்சந்தர்ப்பத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் இறுதிப் பொதுக்கூட்டத்திலும் ஜாஎல பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டமொன்றிலும் தற்கொலைப் படையாளிகளின் குண்டுகள் வெடித்த சம்பவம் நாட்டு மக்கள் மத்தியில் ஒருவித பரபரப்பை ஏற்படுத்தியது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொண்ட கொழும்பு மாநகரசபை மைதான பொதுக்கூட்டத்தில் தற்கொலைப் பெண் போராளியொருவரினால் வெடிக்க வைக்கப்பட்ட குண்டினால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெய்வாதீனமாக உயிர் தப்பினார். கொழும்பு மாநகர சபை மைதானத்தில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் இறுதிப் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிவிட்டு ஜனாதிபதி வெளியேறும் போதே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இச்சம்பவத்தில் ஜனாதிபதி சிறு காயங்களுக்கு உட்பட்ட அதேநேரத்தில் வலது கண்ணில் சத்திரசிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவந்தது. இக்குண்டுவெடிப்பில் 24 பேர் உயிரிழந்தனர். 110 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதேநேரம் ஜாஎலவில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் வெடித்த குண்டினால் மேஜர் ஜெனரால் லகி அல்கம உட்பட 13 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 46 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்களும் தேர்தல் நடைபெற இரண்டு தினங்களுக்கு முன்பு இடம்பெற்றதனால் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்ட அதேநேரத்தில் தெய்வாதீனமாக உயிர்தப்பிய சந்திரிகா மீது அனுதாப அலைகளும் ஏற்படலாயிற்று என்றால் அது மிகையாகாது.

1999.12.18 ஆம் திகதி குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் கூட தேர்தல் திட்டமிடப்பட்டபடி 1999.12.21 ஆம் திகதி காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை இலங்கை பூராகவும் நிறுவப்பட்டிருந்த 9,912 வாக்கெடுப்பு நிலையங்களிலும் நடை பெறுமென அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலில் 11,779, 246 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

தேர்தல் தினத்தன்று சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றன எனக் கூறப்பட்ட போதிலும் கூட தேர்தல் பொதுவாக அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தில் 44 வாக்கெடுப்பு நிலையங்களிலும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் 49 வாக்கெடுப்பு நிலையங்களிலும் தேர்தல்கள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்த அதேநேரத்தில் இப்பகுதிகளின் பாதுகாப்பு நிலைகளைக் கருத்திற்கொண்டு வாக்களிப்பு நிறுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இத் தேர்தலில் 11,779,180 வாக்காளர்கள் அகில இலங்கை ரீதியில் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தனர்.

## 4வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1999

| வேட்பாளர் | கட்சி | வாக்குகள் | % |
|---|---|---|---|
| சந்திரிக்கா குமாரதுங்க | பொதுஜன ஐக்கிய முன்னணி | 4,312,157 | 51.12% |
| ரணில் விக்கிரமசிங்க | ஐக்கிய தேசியக்கட்சி | 3,602,748 | 42.71% |
| நந்தன குணதிலக | மக்கள் விடுதலை முன்னணி | 344,173 | 4.08% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | சிங்களயே மகசம்மத பூமிபுத்திர கட்சி | 35,854 | 0.43% |
| டபிள்யு.வி.எம்: ரஞ்சித் | சுயேட்சை | 27,052 | 0.32% |
| ராஜீவ விஜேசிங்க | லிபரல் கட்சி | 25,085 | 0.30% |
| வாசுதேவ நாணயக்கார | இடதுசாரி ஜனநாயக முன்னணி | 23,668 | 0.28% |
| டெனிசன் எதிரிசூரிய | சுயேட்சை | 21,119 | 0.25% |
| அப்துல் ரசூல் | ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி | 17,359 | 0.21% |
| கமல் கருணாதாச | மக்கள் விடுதலை ஒற்றுமை முன்னணி | 11,333 | 0.13% |
| ஹட்சன் சமரசிங்க | சுயேட்சை | 7,184 | 0.09% |
| ஆரியவங்ஸ திசாநாயக்க | ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | 4,039 | 0.05% |
| அல்விஸ் வீரக்கொடி பிரேமவர்தன | மக்கள் சுதந்திர ஒற்றுமை முன்னணி | 3,983 | 0.05% |
| செல்லுபடியான வாக்குகள் | | 8,435,754 | 97.69% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 199,536 | 2.31% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | | 8,635,290 | 73.31% |

## 4வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1999

வட மாகாணம்

| | யாழ் மாவட்டம் | | வன்னி மாவட்டம் | |
|---|---|---|---|---|
| வேட்பாளர் | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| சந்திரிக்கா குமாரதுங்க | 52,043 | 46.65% | 16,202 | 25.84% |
| ரணில் விக்கிரமசிங்க | 48,005 | 43.03% | 43,803 | 69.87% |
| நந்தன குணதிலக | 413 | 0.37% | 482 | 0.77% |
| ஹரிச்சந்திர விஜேதுங்க | 818 | 0.73% | 93 | 0.15% |
| டபிள்யு.வி.எம். ரஞ்சித் | 1,873 | 1.68% | 420 | 0.67% |
| ராஜீவ விஜேசிங்க | 1,368 | 1.23% | 456 | 0.73% |
| வாசுதேவ நாணயக்கார | 3,394 | 3.04% | 444 | 0.71% |
| டெனிசன் எதிரிசூரிய | 831 | 0.74% | 234 | 0.37% |
| அப்துல் ரசூல் | 1,041 | 0.93% | 306 | 0.49% |
| கமல் கருணாதாச | 487 | 0.44% | 83 | 0.13% |
| ஹட்சன் சமரசிங்க | 552 | 0.49% | 69 | 0,11% |
| ஆரியவங்ஸ திசாநாயக்க | 340 | 0.30% | 40 | 0.06% |
| அல்விஸ் வீரக்கொடி பிரேமவர்தன | 403 | 0.36% | 58 | 0.09% |
| செல்லுப்படியான வாக்குகள் | 111,568 | 94.91% | 62,690 | 97.68% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 5,981 | 5.09% | 1,490 | 2.32% |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 117,549 | 19.18% | 64,180 | 31.23% |

இவர்களுள் 8,635,290 வாக்காளர்கள் (73.32%) வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். 3 ஆம் உலக நாடொன்றில் 73.32% வாக்காளர்கள் வாக்களித்தல் என்பது சிறப்பான அம்சமாகும். அதேநேரம் 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 81.06% வாக்காளர்களும் 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 55.32% வாக்காளர்களும் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 70.52%வாக்காளர்களும் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கதாகும். தேர்தலில் திருமதி.சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க அவர் கள் 4,312,157 வாக்குகளைப் பெற்று வெற்றி வாகை சூடினார். இது செல்லுபடி யான வாக் குகளில் 51.12% ஆகும். இத்தேர்தலில் சந்திரிகாவுக்கு பெரும் சவாலாக இருந்த ரணில் விக் கிரமசிங்க 3,602,748 வாக்குகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். இது செல்லுபடியான வாக்குகளில்42.71% வாக்குகளாகும். இலங்கை அரசியலமைப்பு விதிகளுக்கமைய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டிய வேட்பாளர் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 50% இற்கு மேல் பெற்றாக வேண்டும். இதற்கமைய 1999 ஆம் தேர்தல் முடிவுகளின்படி 4,217,878 வாக்குகளை குறைந்தபட்ச வாக்குகளாகப் பெறுவது அவசியம். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறைந்தபட்ச வாக்குகளை விட 94,279 வாக்குகளை அதிகமாகப் பெற்றிருந்த அதேநேரத்தில் இரண்டாமிடத்தை அடைந்த ரணில் விக்கிரமசிங்கவைவிட 709,409 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தொடரும்...

# கிழக்கில் வேலைவாய்ப்புக்கள் வழங்கும்போது இன, மத வேறுபாடின்றி சமமாக வழங்குவேன்


## கிழக்கு மாகாண ஆளுநர் உறுதியளிப்பு

(கொழும்பு)

**கிழக்கில் வேலைவாய்ப்புகள் வழங்கும்போது இன, மத வேறுபாடின்றி சமமாகவே வழங்குவேன் என கிழக்கு மாகாண ஆளுநர் ஷான் விஜயலால் டி சில்வா உறுதியளித்தார்.**

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு வேலைவாய்ப்புக்கள் வழங்குமாறு கோரிக்கை விடுத்து வருகைதந்த இளைஞர், யுவதிகளிடமே அவர் மேற்கண்டவாறு வாக்குறுதி வழங்கினார்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்பும் போது அனைவருக்கும் ஒரே விதத்தில் பாகுபாடின்றி நியமனங்களை வழங்கக் காத்திருப்பதாகவும் நிதியமைச்சிலிருந்து அனுமதி கிடைத்தவுடன் மிக விரைவில் நியமனங்கள் வழங்க உள்ளதாகவும் தங்களது கல்வித் தகைமைகளுக்கு ஏற்ற விதத்தில் நியமனங்களை வழங்க உள்ளதாகவும் தாங்கள் தொழில் கேட்டு அங்குமிங்கும் அலைந்து திரிய வேண்டாம் எனவும் தொழில் இல்லாமல் இருப்பதால் நீங்கள் கஷ்டப்படுவதை நான் நன்கறிந்தவன்



எனவும் அவர்களிடம் தெரிவித்தார்.

தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி திருகோணமலையிலிருந்து கொழும்பிற்கும் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு- மட்டக்களப்பிலிருந்து மீண்டும் திருகோணமலைக்கும் சென்று அலைய வேண்டாம்.

உங்களுடைய தகுதிக்கேற்ற விதத்தில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு நான் மிகவும் உறுதுணையாக இருப்பேன். ஆனாலும் கிழக்கு மாகாண சபையின் நிதி இல்லாமையால் மத்திய அரசாங்கத்தின் உதவியைப் பெற வேண்டியுள்ளதாகவும் அங்கிருந்து நாம் அனுப்பியுள்ள வேலைவாய்ப்புகளுக்குரிய நிதியமைச்சின் அனுமதி கிடைத்தவுடன் மிக விரைவில் நியமனங்களை வழங்க உள்ளதாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் ஷான் விஜயலால் டி சில்வா மேலும் உறுதியளித்தார். (ஐ)

# ஜனாதிபதி ஆணைக்குழுவில் சமன் ஏக்கநாயக்க வாக்குமூலம்



(கொழும்பு)

விவசாயத்துறை அமைச்சின் ராஜகிரியில் அமைந்துள்ள தனியார் கட்டடத்தை பராமரித்துச் செல்வதுடன் தொடர்புடைய குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக ஒரு பில்லியன் ரூபாய் செல விடப்பட்டுள்ளதாக பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் முன்னிலையாகி அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கட்டடத்திற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 466 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு செலவிடப்பட்ட பணத்தைக் கொண்டு குறித்த கட்டடத்தை விலைக்கு கூட பெற்றிருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

விவசாயத்துறை அமைச்சு நடத்திச் செல்லப்படும் கட்டடம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையான போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கட்டடம் குத்தகை அடிப்படையில் விவசாயத்துறை அமைச்சினை நடத்திச் செல்வதற்காக பெறப்பட்டுள்ள நிலையில், அதனுடன் தொடர்புடைய வர்த்தமானி பத்திரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதாக ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, குறித்த வர்த்தமானி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆணைக் குழுவிற்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிற்கு அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இரு கடைகளில் தீ!

(குளியாப்பிட்டிய)

குளியாப்பிட்டிய நகரின் பிரதான பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள இரு கடைகளில் நேற்று முற்பகல் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குளியாப்பிட்டிய நகர சபை, பொலிஸார் மற்றும் பிரதேச மக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் உணவகம் மற்றும் புத்தகக் கடையொன்றிலேயே மேற்படி தீ விபத்து இடம்பெற்றதாகவும் தகவல்களில் தெரிய வந்துள்ளது.

குறித்த தீ விபத்திற்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொய்யான ஆவணங்களுடன் நிதி சேகரிக்கும் கும்பல்


(கொழும்பு)

பாரிய நோயினால் தாம் பாதிக்கப்பட்டுள்ளத்னால் நிதி வழங்கும் படி பலர் பொய்யான ஆவணங்களுடன் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருவதனால் மக்கள் விழிப்புடன் இருந்து கொள்ளும்படி பொதுமக்களுக்கு அறி வித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி, மீராவோடை ஆகிய பகுதிகளில் இவ்வாறு நிதி திரட்டும் வேலைகளில் பலர் இறங்கியுள்ளதாக அப்பிரதேச பள்ளிவாசல் ஒலி பெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

இவ்வாறு சிலர் பொய்யான நிதி சேகரிப்பில் ஈடுபடுவதனால் உண்மையாகப் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் சங்கடத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொழும்பில் உடைந்து வீழ்ந்த ராஜபக்ஷர்களின் பதாகை



(கொழும்பு)


கொழும்பின் புறநகர் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த மகிந்த மற்றும் கோத்தபாயவின் பதாகை உடைந்து விழுந்தது.

மஹரகம பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருந்த பதாகையே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷவை வரவேற்கிறோம் எனக் கூறி புதிதாக அமைக்கப்பட்டிருந்த பதாகையே நேற்றுக் காலை உடைந்து விழுந்துள்ளது.

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கோத்தபாய, தான் சூழலுக்கு நெருக்கமான தேர்தல் பிரசாரம் ஒன்றையே மேற்கொள்ளவுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

எனினும் சூழல் மற்றும் பொது மக்களுக்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்த பதாகைகள் தொடர்பில் பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)







தென்மராட்சி வலயமட்ட முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா கடந்த வியாழக் கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாகப்பர் கந்ததாசன் மற்றும் தென்மராட்சி கல்வி வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜித்தா சுனில் ஆரியரத்ன, ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். விளையாட்டில் கலந்து கொண்ட அனைத்து சிறார்களுக்கும் விருந்தினர்கள் பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். (படங்கள்: கொடிகாமம் செய்தியாளர்)

# தீ விபத்து மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்





விசேட பிராந்தியங்களுக்கான அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் தீ விபத்து மற்றும் மண்சரிவின் காரணமாக பாதிக்கப்பட்ட லோகி மற்றும் சந்திரகாமம் தோட்டங்களில் வசிக்கும் 25 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வு நேற்று அமைச்சர் வி.ராதாகிருஸ்ணன் தலைமையில் தலவாக்கலை லோகி தோட்டத்தில் நடைபெற்றது.

மண்சரிவால் பாதிக்கப்பட்ட 19 குடும்பங்களுக்கு இதன்போது சமையலறை உபகரணங்கள் மற்றும் மெட்ரஸ் ஆகிய பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அமைச்சர் வி.ராதாகிருஸ்ணன் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துக் கொண்டனர். (ஐ)

# கஜதீரவின் வெற்றிடத்துக்கு மனோஜ் சிறிசேன நியமனம்




ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரான சந்திரசிறி கஜதீர காலமானதை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு தென் மாகாண முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மனோஜ் சிறிசேன நியமிக்கப்படவுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டவர்களில் சந்திரசிறி கஜதீரவுக்கு அடுத்ததாக அதிக விருப்பு வாக்குகளை லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன பெற்றிருந்தார்.

அவர் தற்போது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து வருகிறார்.

இதனால், அவருக்கு அடுத்ததாக அதிக விருப்பு வாக்குகளை பெற்ற மனோஜ் சிறிசேன நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விபத்தில் இரு இளைஞர்கள் பலி!



(கஹதுட்டுவ)

கஹதுட்டுவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் பலியாகினர்.

கஹதுட்டுவச் சந்தியிலிருந்து தியகம நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் அதற்கு எதிர்த் திசையிலிருந்து பயணித்த காரும் நேருக்கு நேர் மோதியதிலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததே குறித்த விபத்திற்கான காரணமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# தேர்தல் பொலிஸ் கடமைகளுக்கு பொறுப்பாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தேர்தல் கடமைகளுக்காக பொலிஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் அபேசிறி குணவர்தன சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக மேல் மாகாண மற்றும் வாகன போக்குவரத்து மாவட்ட பொறுப்பாளருக்கு மேலதிகமாக தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1825

Search for people, places and things

### உதயா

உலகத்தையே வென்றாலும் தனக்கான பெண்ணிடம் தோற்பதுதான் ஆணின் அழகு



### விஜயன்

எவ்வளவுதான் விட்டுக்கொடுத்து உண்மையாக வாழ்ந்தாலும் ஒரு சிலர் நம்முடைய பாசத்தை புரிந்து கொள்ளமாட்டார்கள்



### யாழினி

முயற்சிதான் வெற்றியின் முதற்படி என்றால் அந்த முதற்படியை அடைய மூன்னூறு முறை தோற்றாலும் தளராதே!



### ராகவ்

உடலளவில் ஏற்பட்ட காயம் கூட மறைந்துவிடும்... ஆனால் மனதளவில் சிலர் ஏற்படுத்திய காயம் மரணம் வரை மறைந்து விடாது



### மருதன்

கர்ணனைப்போல் நண்பனைத் தேர்ந்தெடு! நீ வீழ்கின்ற நிலை வந்தபோதும் உனக்காகப் போராடுவான்



### விஷ்ணுஜா

நல்லது நினை... நல்லது செய்... இல்லாவிட்டால் நல்லது செய்பவருக்கு உதவி செய்!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மட்டக்களப்பினை உலுக்கிய சத்துருக்கொண்டான் படுகொலை நினைவு தினம் இன்று அனுஷ்டிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் சத்துருக்கொண்டான், பனிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில் ஆகிய கிராமங்களில் வீடுகளில் தங்கியிருந்த பொது மக்கள் கடந்த 09.09.1990 ஆம் ஆண்டு மாலை 5.30 மணியளவில் சத்துருக் கொண்டான் இராணுவ முகாமுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

இதில் விசேட தேவையுள்ள 5 சிறுவர்கள் உட்பட 47 சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் ஆகியோர் அடங்குவர்.

படுகொலைகள் சம்பந்தமாக காணாமல்போனவர்களை கண்டுபிடிப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை இடம் பெற்ற போதும் இவற்றுக்கான எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இச் சம்பவம் இடம்பெறுவதற்கு முதல் நாள் இராணுவ முகாம்களிலிருந்து இராணுவ உளவாளிகள் நோட்டமிட்டனர்.

நன்கு திட்டமிட்டு அடுத்த நாள் அதாவது 09.09.1990 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் இராணுவ சீருடையணிந்தவர்களும் சத்துருக் கொண்டான் முகாமுக்கு வருவார்கள். அங்கே உங்களுக்கு கூட்டம் ஒன்று இருக்கின்றது என்று கூறி அழைத்துச் செல்லப்பட்டனர்.

நடக்கமுடியாதவர்களை இராணுவ லொறிகளில் ஏற்றிச்சென்று அங்கு கொண்டு சென்று இவர்களை ஆண்கள் வேறு, பெண்கள் வேறு, சிறு பிள்ளைகள் வேறாக பிரிக்கப்பட்டனர்.

சிங்கள இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையும் இணைந்தே இந்த கோரத் தாண்டவத்தை அரங்கேற்றின.

இவற்றுக்கெல்லாம் தயாரான நிலையில் அன்று இரவு 7 மணியளவில் இவர்கள் வாளினால் வெட்டியும் கத்தியினால் குத்தியும் துப்பாக்கிகளால் சுடப்பட்டும் அப்பாவி பொதுமக்கள் ரயர் போட்டு எரிக்கப்பட்டனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்ட மக்கள் குழிகளில் தூக்கி வீசப்பட்டனர். அன்று இரவு 8 மணியளவில் பெரும் கூக்குரல் சத்தமும் சிறுவர்களின் மரண ஓலச்சத்தமும் எங்கும் எதிரொலித்த வண்ணம் காணப்பட்டது.

இவ்வாறு வெட்டி குழியில் வீசப்பட்ட ஒருவர் அக்குழியில் விழாமல் துரதிர்ஷ்டவசமாக வெளியில் வீசி எறியப்பட்டார். வெட்டுக் காயங்களுடன் தடுப்பு வேலியருகே வீசப்பட்ட நபர் தவழ்ந்து சென்று அருகே இருந்த பற்றைக்குள் ஒளிந்து, மறுநாள் காலை வேளையில் அமெரிக்க மிஷன் அருட் தந்தை மூலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இதனை அறிந்த இலங்கை இராணுவ உளவாளிகள் வைத்தியசாலையயில் வைத்து அவரை கடத்த முற்பட்டனர். இதனை அறிந்த அருட் தந்தை தன் பாதுகாப்பில் வைத்து சிகிச்சை அளித்ததால் அவர் உயிருடன் காப்பாற்றப்பட்டார்.

இவர் மூலமாக பல தகவல்கள் வெளிவந்தன. பின்னர் மனித உரிமை ஆணைக் குழு மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்களால் சத்துருக் கொண்டான் இராணுவ முகாமிற்கு சென்று நடந்த சம்பவத்தை முகாமிற்கு பொறுப்பான இராணுவ அதிகாரியிடம் வினவப்பட்டது.

இதற்கு அவர்கள் கூறிய பதில் இங்கு யாரையும் நாங்கள் கொண்டு வரவுமில்லை. அவ்வாறான சம்பவம் ஏதும் இங்கு இடம்பெறவுமில்லை என்பதே இவர்களின் பதிலாக அமைந்தது.

இதற்கு பொறுப்பான இராணுவ அதிகாரிகளாக இம்முகாமில் கடன்மயாற்றிய கப்டன் காமினி வர்ண குலசூரிய, கெரத் மற்றும் விஜயநாயக்க மேலும் இதற்கான கட்டளை அதிகாரி கேணல் பெசி பெனாண்டோ ஆகியோர் கொலைக்கான முக்கிய சூத்திரதாரிகளாக இனம் காணப்பட்டனர். இன்று வரை இக் கொலைக்கான எவ்வித விசாரணையும் நடைபெறவில்லை.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் வாக்கு மூலங்கள் கொடுக்கப்பட்டும் ஆதாரங்கள் கொடுக்கப்பட்டும் எந்த ஒரு நபருக்கும் எவ்வித விசாரணைகளோ, தண்டனைகளோ வழங்கப்படவில்லை.

ஏன் இவ்வாணைக்குழு கண்துடைப்பாக செயற்படுகின்றது. இவ்வாணைக் குழுவிற்கு வாக்கு மூலங்கள் கொடுப்பதால் குற்றவாளிகள் ஆதாரங்களை அழிப்பதற்கான சந்தர்ப்பமாக அமையுமே ஒழிய இவற்றை விசாரணை செய்து இம்மிருகத்தனமான இன வெறி படுகொலைக்கு யார் பொறுப்புக்கூறுவார்கள்? இக்கொலையாளிகள் தற்போதும் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். இவை அனைத்தும் ஐ.நா. சபைக்கு விசாரணைக்காக கொண்டு செல்லப்படுமா?

# பெரஹராவில் யானைகள் குழப்பம்

## 17 பேர் காயம்



(கொழும்பு)

கொழும்பு, கோட்டை ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பெரஹராவின் போது இரு யானைகள் குழம்பியதில் 17 பேர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கொழும்பு, ஜெயவர்த்தனபுர மற்றும் களுபோவில வைத்தியசாலைகளில் அனுதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-7)

# சிறைச்சாலை அதிகாரி கொலை பாதாள உலகத்திற்கு தொடர்பு


(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை பயிற்சிப்பாடசாலையின் சிறைச்சாலை அதிகாரியின் கொலைச் சம்பவத்துடன், பாதாளக்குழு உறுப்பினருக்கு தொடர்பு இருக்கின்றமை விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இந்திக கமகே தெரிவித்தார்.

கடந்த சில வருடாங்களுக்கு முன்னர் களனி பகுதியில் வைத்தியர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜயலத் சில்வா எனப்படும் பாதாளக்குழு உறுப்பினர் திட்டமிடலுக்கு அமையவே சிறைச்சாலை அதிகாரியின் கொலை இடம்பெற்றுள்ளதாகவும் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (இ-7)

# தமிழர் ஒருவரும் ஜனாதிபதியாகலாம்

## சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் கூறுகிறார்



(கொழும்பு)

இலங்கையில் தமிழர் ஒருவர் ஜனாதிபதியாகும் வாய்ப்பு இல்லை என்று அரசியலமைப்பில் எந்தவொரு இடத்திலும் கூறப்படவில்லை என அரச சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் யூ.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர் அல்லது தமிழ் பேசும் ஒருவர் ஜனாதிபதியாக முடியாது. மாறாக பௌத்த மதத்தைச் சேர்ந்த ஒருவரால்தான் ஜனாதிபதியாக முடியும் என்ற கருத்து சமூகத்தில் பரவலாகக் காணப்படுகின்றது.

இதுகுறித்து ஊடகமொன்று அரச சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் யூ.ஆர்.டி.சில்வாவிடம் வினவிய போது, "அப்படி எந்தவொரு விடயமும் இலங்கையின் அரசியலமைப்பில் எழுதப்படவில்லை".

நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் அதிகமான சந்தர்ப்பங்களில் தமிழர்கள் போட்டியிட்டிருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 160 | 140 | 200 |
| தக்காளி | 80 | 150 | 120 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 120 | 110 | 100 |
| கோவா | 60 | 80 | 100 | 60 | 100 |
| கரட் | 80 | 120 | 120 | 90 | 120 |
| பூசணி | 60 | 50 | 50 | 40 | 60 |
| புடோல் | 60 | 90 | 80 | 60 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 110 | 160 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 120 | 105 | 140 |
| பாகற்காய் | 160 | 180 | 160 | 80 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | 60 | 120 |
| பயற்றங்காய் | 70 | 90 | 80 | 40 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 150 | 150 | 140 | 110 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 80 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 220 | 240 | 220 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 140 | 60 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 60 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 400 | 350 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 250 | 600 | 300 | 150 | 260 |
| வெங்காயப்பூ | 150 | 160 | 140 | 120 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 10 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 60 | 100 | 60 |




# வணங்காத தலை



அவர் தன் சுய முயற்சியால் முன்னுக்கு வந்தவர். அது குறித்து அவருக்குப் பெருமை உண்டு. அவருக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை.

“கடவுள் என்ன செய்தார்? நான் படித்தேன், நான் உழைத்தேன், நான் சிந்தித்து, திட்டமிட்டுச் செயற்பட்டேன். பிரச்சினைகள் வந்தபோது அமைதியாக அவற்றை எதிர் கொண்டேன். கடவுளிடம் உதவி கேட்கவில்லை. கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. அவரை வணங்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை” என்பார்.

அவருக்குத் திருமணம் ஆயிற்று. அவர் மனைவிக்குக் கடவுள் பக்தி உண்டு. அதில் அவர் குறுக்கிடவில்லை.

பல ஆண்டுகள் மண வாழ்க்கைக்குப் பிறகு ஒரு முறை அவர் மனைவி அவரிடம் சொன்னாள். “நமக்கு ஐம்புலன்கள் இருக்கின்றனவே, அவற்றின் பயன் என்ன என்று சொல்ல முடியுமா?”

“பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவனைக் கேட்பதுபோல் கேட்கிறாயே! சரி. படித்தது ஞாபகம் வருகிறதா என்று பார்க்கிறேன். கண் - பார்ப்பதற்கு. காது - கேட்பதற்கு. நா - சுவையை உணர்வதற்கு. நாசி - மணத்தை நுகர்வதற்கு. உடல் - தொடு உணர்ச்சிக்கு. எண்ணிக்கை ஐந்து வந்து விட்டதல்லவா?”

“சரி. தலை எதற்கு?”

“புதிதாகக் கேட்கிறாயே! மூளையை உள்ளடக்குவதற்கு, முகத்துக்கு மேல் மூடியாக இருந்து உடலுக்குள் நீர், தூசு இதெல்லாம் மேலிருந்து விழாமல் தடுப்பதற்கு!”

“அதை விட முக்கியமான ஒரு பணி தலைக்கு உண்டு. இறைவனை வணங்குவது.”

“ஓ! கோவிலுக்குப் போய் விட்டு வந்தாய் அல்லவா? அங்கே உபன்யாசத்தில் சொன்னார்களாக்கும்?”

“கோவிலில் ஒருவரைப் பார்த்தேன். அவருக்கு ஒரு பையன் இருக்கிறானாம். பிறவி முதலே ஐம்புலன்களும் செயலற்றிருக்கின்றனவாம். கண் திறந்திருக்கும் ஆனால் எதையும் பார்க்காது. நாவுக்குச் சுவை தெரியாது. எதைக் கொடுத்தாலும் மென்று விழுங்கும். மூக்குக்கு வாசனை தெரியாது. மல்லிகையின் மணமும் ஒன்றுதான், சாக்கடையின் நாற்றமும் ஒன்றுதான். காது சுத்தமாகக் கேட்காது. உடலில் உணர்ச்சி கிடையாது. கீழே விழுந்தாலும் வலி தெரியாது. நடை பிணம் என்று சொல்வார்களே அது மாதிரி என்று சொல்லி வருத்தப்பட்டார்.”

“மிகவும் பரிதாபமானதுதான். ஐம்புலன்கள் உடலில் உறுப்புக்களாக இருந்தும் அவை பணி செய்யவில்லை என்பது மிகவும் கொடுமை.

ஆனால் அதற்கும், கடவுளை வணங்குவதுதான் தலையின் தலையாய பணி என்று நீ சொல்வதற்கும் என்ன சம்பந்தம்?”

“ஒரு திருக்குறள் நினைவுக்கு வந்தது.”

“என்ன குறள்?”

“கடவுளை வணங்காத தலை செயற்படாத புலன்களைப்போல என்று திருவள்ளுவர் சொல்கிறார்.”

“திருவள்ளுவருக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. அவர் அப்படித்தான் சொல்லுவார்! என்றாவது எனக்குக் கடவுள் நம்பிக்கை வந்தால் நானும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வேன்.”

“ஒருநாள் உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.”

**குறள் 9:**

கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை.

**பொருள்:**

எட்டு குணங்களை உடைய இறைவனை வணங்காத தலை செயற்படாத புலன்களைப் போல் பயனற்றது.

## பொது அறிவுத்துணுக்குகள்

- அட்லாண்டிக் பகுதியில் ஆண்டிற்கு ஒரு முறைதான் சூரியன் உதயமாகிறது.
- மகாத்மா காந்தி இந்தியாவில் மட்டுமல்ல தென்னாபிரிக்காவிலும் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார்.
- முதன் முதலில் கேள்விக் குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தீன் மொழிதான்.
- கைரேகையை வைத்து குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.
- மீன் தன் வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.
- பசுமைப் புரட்சி என்று கேள்விப்பட்டிருப்போம். அது என்ன இளஞ்சிவப்புப் புரட்சி. அதாவது மருந்து வகைகள் உற்பத்தியை பெருக்குவது ஆகும். நீலப் புரட்சி என்பது மீன் உற்பத்தியை பெருக்குவதும், வெண்மைப் புரட்சி என்பது பால் உற்பத்தியை குறிப்பதும் ஆகும். மஞ்சள் புரட்சி என்பது எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை பெருக்குவது ஆகும்.
- உலகில் முதன் முதலாக மியூசியம் தொடங்கிய நாடு எகிப்து.
- உலகின் முதல் கண் வைத்தியசாலை 1818 இல் லண்டனில் தொடங்கப்பட்டது.

## விவேகானந்தர் சிந்தனைத்துளிகள்

- மனதை ஒருமுகப்படுத்த பழகி விட்டால், உலகமே நமக்கு கட்டுப்பட்டு விடும்.
- கல்வி என்பது வெறும் புள்ளி விபரத்தைச் சேகரிப்பதல்ல. அது மன தைரியத்தை வழங்குவதாக அமைய வேண்டும்.
- வெறும் பாடம் சொல்லித் தந்தால் போதாது. நல்லொழுக்கம், பிறருக்கு உதவும் மனப்பான்மையை கற்றுத்தர வேண்டும்.
- ஒருவன் முழுமனிதன் என்ற அந்தஸ்தைப் பெற வேண்டுமானால் அவனுக்கு கல்வி அவசியம்.
- முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக் கொள். எஜமான் ஆகும் தகுதி, தானாகவே வந்து விடும்.

## ஆரோக்கியம் தொடர்பான பழமொழிகள்

- பாலுக்கு மிஞ்சின சுவையுமில்லை;பல்லக்குக்கு மிஞ்சின சொகுசுமில்லை.
- நாழி அரிசி சோறு உண்டான், எமனுக்கு உயிர் கொடான்.
- பொன்னாங்கண்ணிக்கு புளியிட்டு ஆக்கினால் உண்ணாப் பெண்ணும் ஒரு உழக்கு உண்ணும்.
- சுக்கு அறியாத கஷாயம் உண்டா?
- பருப்பில்லாத கல்யாணம் உண்டா?
- மங்கும் காலம் மாங்காய், பொங்கும் காலம் புளியங்காய்.
- அரச மரத்தைச் சுற்றியதும் அடிவயிற்றைத் தொட்டுப்பார்த்தது போல!
- ஐப்பசி மருதாணி அரக்காய்ப் பற்றும்.
- ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது!
- விருந்தும் மருந்தும் மூன்றே நாள்.
- மக்களைக் காக்கும் மணத்தக்காளி.
- தேனும் தினை மாவும் தேவர்க்கு அமிர்தம்.
- அன்னம் அடங்கினால் ஐந்தும் ஒடுங்கும்

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எப்போதுதான் உங்கள் முயற்சி வெற்றி பெறும்

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (7) யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் நடக்கின்றன எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுவதானது தங்களை ஏமாற்றவே என்று தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வாக அரசியலமைப்புச் சீர்திருத்தம் தயாரிக்கப்பட்டது.

எனினும் அதனை நிறைவேற்றுகின்ற எந்த முயற்சிகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளவில்லை.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைப் பாராளுமன்றில் நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை என்பதால், தான் எதுவும் செய்ய முடியாதென்று கைவிரித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க; இப்போது யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறுவதைக் கேட்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறி பல ஆண்டுகளாகத் தமிழினம் ஏமாற்றப்பட்டு வருகிறது.

இவ்வாறு ஏமாற்றப்படுவது ஒன்றும் தமிழ் மக்களுக்குப் புதிதல்ல.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், பிரதமர் பதவியை ஏற்று ஐந்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்ற கட்டத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது எனப் பிரதமர் கூறுவதானது, எந்த வகையிலும் ஏற்புடையதன்று.

இத்தகைய ஏமாற்று உரைகளை தமிழர் தாயகத்தில் வைத்து ஆற்ற வேண்டாமென அவர்களை இங்கு அழைத்து வருகின்றவர்கள் ஆலோசனை கூறி வைக்க வேண்டும்.

இதைவிடுத்து இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று எந்தவித அடிப்படை ஆதாரங்களும் இல்லாமல் கூறுவதானது, வெறும் தேர்தல் அரசியலை மையப்படுத்தியது என்றே கருத வேண்டும்.

மிக நீண்ட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நொந்து கெட்டுப் போயிருக்கும்போது அவர்களை ஏமாற்றுவது தர்மமன்று.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு என்ன தந்தார்கள் என்பதை நாம் மிகவும் தெளிவாக அறிந்து வைத்துள்ளோம்.

எனவே நடக்காத ஒன்றைக் கூறுவதானது எந்த வகையிலும் பொருத்தமற்றது.

புதிய அரசியலமைப்பை எப்படியும் அமுலாக்கியே ஆகுவேன் என்று கூறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஈற்றில் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று கைவிரித்தார் என்றால் நிலைமை எப்படி என்பதைப் புரிந்து கொள்வது கடினமன்று.

ஆக, தமிழ் மக்களுக்கான தீர்வு என்பதைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகள் என்பது சர்வதேசத்தின் அழுத்தத்தினூடாகவே ஏற்பட முடியும்.

இதனை ஏற்படுத்த தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டும்.

# காற்றாலை நிறுவனம் மீது வழக்குப் போட்டால் நட்டஈட்டுத் தொகையை வழங்க வேண்டிவரும்

## சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர்

(சாவகச்சேரி)

காற்றாலை நிறுவனத்தினர் மீது வழக்குப் பதிவு செய்தால் அவர்கள் கோரும் நட்ட ஈட்டு தொகையை நானும், சபையில் உள்ள 31 உறுப்பினர்களும் தான் செலுத்த வேண்டிவரும் என சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போது சபை உறுப்பினர் ஒருவர் "அரச காணியை வழங்க மறுத்ததாக குற்றஞ்சாட்டி மறவன்புலவு காற்றாலை மின் உற்பத்தி நிறுவனத்தினர் தென்மராட்சி பிரதேச செயலர் மீது நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்தனர்.

காற்றாலை நிறுவனத்தினர் பிரதேச செயலர் மீது வழக்குப் போட முடியுமென்றால் அனுமதி பெறப்படாத காற்றாலை மின் உற்பத்தி நிறுவனத்தினர் மீது ஏன் பிரதேச சபை வழக்குப் போட முடியாது? எனக் கேள்வி எழுப்பிய போதே செயலாளர் மேற்கண்டவாறு பதிலளித்தார். இது தொடர்பாக செயலாளர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்கரையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பிரதேசம். ஆகவே அப்பகுதிகளில் இடம்பெறுகின்ற கட்டுமானப் பணிகளுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதி பெற்றால் போதும் பிரதேச சபையிடம் அனுமதி பெறத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச சபையினராகிய நாம் காற்றாலை மின் உற்பத்தி நிறுவனத்தினர் மீது வழக்குத் தொடுப்பதானால் அதை நாம் ஆரம்பத்தில் செய்திருக்க வேண்டும்.

தற் போது காலம் கடந்து விட்டது அவர்கள் வேலைத் திட்டங்களை ஆரம்பித்து விட்டனர். நாம் வழக்குத் தொடுத்து அவர்கள் நட்ட ஈடு கோரினால் அதனை நாமே பொறுப்பேற்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

காற்றாலை மின்னுற்பத்தி நிறுவனத்தினர் மறவன் புலவு கடற்கரையில் இயற்கை வளங்களை அழிக்கின்றனர், பிரதேச சபையின் அனுமதியின்றி எமது பகுதிக்குள் கட்டுமானப் பணிகளைச் செய்ய எத்தனிக்கின்றனர்.

ஆகவே அவர்கள் மீது பிரதேசசபை வழக்குத் தொடுக்க வேண்டும் என கடந்த ஒருவருட காலத்திற்கு முன்பே சபை உறுப்பினர்கள் சபையில் சுட்டிக்காட்டியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-30)

# ஜனாதிபதியின் ஒப்புதலின்றி வெளியிடப்பட்ட காணொலி

(கொழும்பு)

அண்மையில்இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பில் வெளியான காணொலி அவரின் அனுமதியின்றியே ஒளிபரப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காணொளியில் அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்த கருத்துக்கள் இடம்பெற்றிருந்தன. எனவே இது அரசாங்கம் என்ற வகையில் ஒழுக்கமான செயற்பாடு அல்ல என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

தமது அரசாங்கத்தின் பிரதமரையே ஜனாதிபதி விமர்சிப்பது ஏற்புடையதல்ல என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகரவை வினவ அவர் குறித்த காணொளி ஜனாதிபதி ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்டதாக குறிப்பிட்டார்.

இந்நிலையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவிடம் வினவியபோது அங்கிருந்து உரிய பதில்கள் கிடைக்கவில்லை என்பதால், ஊடகப் பிரிவின் பணிப்பாளரை ஜனாதிபதி கடுமையான வார்த்தைகளால் திட்டியதாக தெரியவருகிறது. (இ-7)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையுடன், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய தொற்று நோய்கள் தடுப்பு வைத்தியசாலையின் விசேட வைத்தியர் ஆனந்த விக்ரமசூரிய இத்தகவலை வழங்கியதுடன், நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை சுத்திகரிப்பதற்கு பொதுமக்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 44 ஆயிரத்து 193 டெங்கு தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் எனச் சுட்டிக் காட்டினார்.

இந்த மாதத்தில் மாத்திரம், 8 ஆயிரத்து 982 டெங்கு நோயாளர்கள் பதிவாகி உள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# தலிபான் தலைவர்களுடனான சமாதானப் பேச்சுவார்த்தை ரத்து

## ட்ரம்ப் அறிவிப்பு

ஆப்கானிஸ்தானின் தலிபான் தலைவர்களுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை இரத்துச் செய்ததாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

காபூலில் நடந்த தாக்குதலில் ஒரு அமெரிக்க இராணுவ வீரர் உட்பட 12 பேர் கொல்லப்பட்டதாக தெரிவித்த மையை அடுத்தே இந்தப் பேச்சுவார்த்தை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ட்ரம்ப் அறிவித்தார்.

மேரிலாந்தின் கேம்ப் டேவிட் நகரில் உள்ள ஜனாதிபதி வளாகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தலிபானின் முக்கிய தலைவர்களுடன் ஒரு இரகசிய சந்திப்பைத் திட்டமிட்டதாக ட்ரம்ப் கூறினார்.

இதனையடுத்து ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதியையும் சந்திக்கவும் ட்ரம்ப் திட்டமிட்டிருந்தார்.


இந்நிலையில் காபூலில் நடந்த தாக்குதலில் பின்னணியில் தாம் இருப்பதாக கிளர்ச்சியாளர்கள் தெரிவித்ததையடுத்து பேச்சு வார்த்தைகளை உடன் நிறுத்தி விட்டதாக ட்ரம்ப் தெரிவித்தார். (ஐ-2)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் மாகியப்பிட்டி, பெருமாள் கடவை, சண்டிலிப்பாய் வைரவர் கோவிலடி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் இயக்கச்சி, இயக்கச்சி இராணுவ முகாம், North lanka agri food, கரந்தாய், மல்வில், முகாவில், விநாயகபுரம், கோதாண்டார்குளம், கோவில் வயல் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பேரறிவில் தோய்வோம்



உலக வாழ்வில் பொருள், மக்கள், பால் (Sex), புகழ், செல்வாக்கு என்ற ஐவகைப் பற்று ஏற்படுவது இயல்பே. கடமை உணர்வோடும், அளவு, முறை அறிந்தும் விழிப்போடு இப்பற்றுக்களை வளர்த்துக் காத்துக் கொள்ள வேண்டியது பிறவிப் பயனை எய்த அவசியமானது. நீரில் குளிப்பது தேவைதான் ஆனால், நீரில் மூழ்கி விடாமலும் காத்துக் கொள்ள வேண்டும். நெருப்பு வாழ்வுக்குப் பலவகையிலும் தேவை தான் ஆனால், நெருப்பு எரித்து விடாமலும் காத்துக் கொள்ள வேண்டும்.

எந்த இடத்தில் மனிதன் மேலே சொல்லப்பட்ட ஐவகைப் பற்றுதல்களால் அறிவு குறுகி மயங்கித் தன் பிறவி நோக்கத்தையும், வாழ்வின் நெறியையும் மறக்கின்றானோ, அதே நேரத்தில், மனிதனிடத்தில் அமைந்துள்ள அடித்தள ஆற்றலாகிய பேரறிவு, குறுகி நிற்கும் புற அறிவை நேரான வழிக்குத் திசை திருப்புகிறது.

அப்போது விருப்பங்கள், செயல்கள் இவற்றில் தடைகள் விளைந்து வாழ்வில் மாற்றங்கள் தோன்றுகின்றன. இவையே துன்பமாக, சிக்கலாக, கருத்துப் பிணக்காகப் பெற்றுப் புற மனம் குழப்பமடைகிறது. இத்துன்பங்களிலிருந்து புறமனத்தை மீட்க, பேரறிவு, விரிந்த இயற்கை ஆற்றல் மூலமாகவும், மனிதர்கள் மூலமாகவும் உதவிக் கொண்டே தான் இருக்கும்.

இந்த நிலையிலேனும், புறமன இயக்கத்திலேயே குறுகியுள்ள மனிதன் அவன் வாழ்வின் இயக்கக்களமான அருட்பேராற்றலை நினைவு கொள்ள வேண்டும். பேரறிவின் நிலைக்கு அந்நினைவு அழைத்துச் சென்று ஒன்றவைத்துவிடும். இவ்வகையில் பேரறிவில் புறமனம் தோய்வு பெறும்.

# புனித தெரேசாள் மகளிர் கல்லூரிக்கு இரண்டு தங்கம், ஒரு வெண்கலம்



இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி இரு தங்கப் பதக்கங்களையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தது.

இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி நேற்று கேகாலை ராஜகிரிய மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் புனித தெரேசாள் மகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த டி.பிரகவி 16 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் 84 கிலோ எடைப் பிரிவில் 204 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் எஸ்.நிதுஷா 63 கிலோ எடைப் பிரிவில் 203 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் அதே நிறைப் பிரிவில் பா.தாட்சாயினி 134 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (க)

# அரையிறுதிக்குள் நுழைந்தது நாவற்குழி அன்னை அணி...!!



யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் அணிக்கு 11 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளாலும் எதுவித கோல்களையும் பதிவு செய்ய முடியாது போக வெற்றி, தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 03:01 என்ற கோல் கணக்கில் அன்னை அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க)

# றெஜின்போ அணியை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது சைனிங்ஸ்



றெஜின்போ அணியை 4:0 என வெற்றிகொண்டு பிரிவில் முதலிடத்தினை பிடித்து அரையிறுதிக்கு நுழைந்தது சைனிங்ஸ் அணி.

வல்வை தீருவில் விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 நபர் கொண்ட சுழல்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரில் ரேவடி அணியுடனான போட்டியில் வெற்றி பெற்று லீக் சுற்றின் தனது இரண்டாவது போட்டியில் சைனிங்ஸ் அணி றெஜின்போ அணியுடன் மோதியது.

ஆட்ட ஆரம்பம் முதல் இறுதி வரை ஆதிக்கம் செலுத்தியது சைனிங்ஸ் அணி. அனுபவ வீரர் உதயகுமார் 2, சுரேன் 1 மற்றும் செந்தூரன் 1 கோல்களை போட்டனர். இறுதியில் 4:0 என வெற்றி பெற்றது சைனிங்ஸ் அணி. (க)



இலங்கை தமிழரசுக் கட்சி பொலிகண்டி வட்டார அணிகளுக்கிடையில் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து பொலிகை பாரதி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் திக்கம் இளைஞர் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

# நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை வென்று அரையிறுதிக்குள் நுழைந்தது வளர்மதி அணி



யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் அணிக்கு 11 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் நாவாந்துறை சென்.மேரீஸ் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளாலும் எதுவித கோல்களையும் பதிவு செய்ய முடியாது போக வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:02 என்ற கோல் கணக்கில் வளர்மதி அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (க)


## தேசியமட்ட பளுதூக்கல் போட்டி

# சென்.ஜேம்ஸ் மகளிருக்கு தங்கம் யாழ்.இந்து மகளிருக்கு வெள்ளி

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கும் போட்டியில் சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த வி.ஐஸ்வர்யா தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார்.

இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட பளுதூக்கல் போட்டிகள் நேற்று முன்தினம் கேகாலை ராஜகிரிய மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் 18 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் 84 கிலோவுக்கு மேற்பட்ட நிறைப் பிரிவில் சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த வி.ஐஸ்வர்யா 225 கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.




இதனிடையே இதில் 18 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜெ.பஜீனா 63 கிலோ எடைப் பிரிவில் 205 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளி பதக்கத்தை கைப்பற்றினார். (க)







13 ஆவது வடமாகாண மெய்வல்லுநர் போட்டிக்கு செல்லும் வீர, வீராங்கணைகளுக்கு கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் சண்முகராஜா ஜீவராஜ் சீருடைகள் வழங்கி வைத்தார். குறித்த போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பங்குபெற உள்ள வீரர்களுக்கே இவ்வாறு குறித்த பிரதேச சபை உறுப்பினரின் சொந்த நிதியிலிருந்து சீருடைகள் வழங்கி வவைக்கப்பட்டுள்ளன.

## வடக்குக்கு...

இன்று திங்கட்கிழமை இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

வடக்கிற்கு விஜயம் செய்யும் அவர், இன்று காலை யாழ்.முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கண்காட்சியில் பங்கேற்கவுள்ளார்.

அதனையடுத்து பிற்பகல் ஒரு மணியளவில் கிளிநொச்சிக்கு செல்லும் அமைச்சர், கண்டாவளை மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தலா இரண்டு வீடமைப்புத் திட்டங்களை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார். (ஞா)

## வன்முறைக்...

வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் அங்கிருந்த பொருட்களை அடித்துச் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றது.

2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர் கொண்ட கும்பலே வீட்டில் இருந்தவர்களை வாள்களைக் காண்பித்து மிரட்டிவிட்டு வீட்டிலிருந்த பொருட்கள், தளபாடங்களை அடித்துச் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஞா)

## சோதனைச்...

சாவடிகள், காவலரண்கள் அமைக்கப்பட்டன. த்ற்போது, நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டமையை தொடர்ந்து பெரும்பாலான பகுதிகளில் அமைக்கப்பட்ட சோதனைச் சாவடிகள் நீக்கப்பட்டுள்ளன.

எனினும், ஆனையிறவு பகுதியில் மாத்திரம் சோதனை சாவடி நீக்கப்படாமைக்கு தமிழ் அரசியல்வாதிகள் சிலர் எதிர்ப்பினை வெளியிட்டு வந்தனர். இந்த நிலையிலேயே ஆனையிறவு சோதனைச்சாவடி தற்போது நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஞா)

## மாகாண சபை...

முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.


கொவிசெத

திகதி 2019.09.08

சீட்டிழுப்பு இலக்கம் 2234

ஆங்கில எழுத்து M — வெல்லப்பட்ட இலக்கங்கள் 04 13 46 68

தேசிய லொத்தர் சபை

நீரோகா

திகதி 2019/09/08

சீட்டிழுப்பு இலக்கம் 0595

லக்கினம் இடபம் — வெற்றி இலக்கங்கள் 27 31 59 62

தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத

திகதி 2019/09/08

சீட்டிழுப்பு இலக்கம் 4001

ஆங்கில எழுத்து J — வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 0 0 8 6 2

தேசிய லொத்தர் சபை

தன நிதானய

திகதி 2019-09-08

சீட்டிழுப்பு இலக்கம் 198

ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 15 49 63 78

தேசிய லொத்தர் சபை


பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாத காரணத்தினால், புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனது.

எனினும் அதிகார பரவலாக்கம் தொடர்பாக இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டவாக்க சபையை கூட்டி கலந்துரையாடி அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## 4,286 பேருக்கு...

ஒரே தினத்தில் சுமார் 4,286 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

சிங்கள மொழி மூலம் 2,340 ஆசிரியர்கள், தமிழ் மொழி மூலம் 1,300 ஆசிரியர்கள் மற்றும் ஆங்கில மொழி மூலம் 646 ஆசிரியர்கள் உள்ளடங்களாகவே இந்த நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டது. (ஞா)

## தமிழ் மக்களைப்...

யின் மூன்றாவது மாநாடு நேற்று சுகத தாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவற்றைக் கூறினார்.

இன்று தேசிய உற்பத்தியாளர் சர்வதேச வர்த்தகத்துடன் போட்டியிட முடியாத நிலையில் தேசிய உற்பத்தியாளர் தமது உற் பத்திகளை கைவிடும் நிலைமை உருவாகியுள்ளது. ஆகவே அவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கி அவர்களை பாதுகாத்து முன்னேற்ற வேண்டும்.

அது மட்டும் அல்லாது தேசிய பாதுகாப்பு கேள்வியாக உள்ளது. இந்த நாட்டின் பயங்கரவாதத்தை ஒழித்து குறுகிய காலத்தில் சமாதானத்தை உருவாக்கி அந்த சமாதானத்தை பாதுகாத்தோம். எனினும் தற்போது துரதிர்ஷ்டவசமாகவும், எமது பாதுகாப்பை பலவீனப்படுத்திய காரணத்தினாலும் இந்த நாட்டில் மீண்டும் குண்டுகள் வெடிக்க ஆரம்பமாகியுள்ளது.

எனவே மீண்டும் பயங்கரவாதத்தை ஒழிக்க முயற்சிகளை எடுக்கையில் மக்கள் சுதந்திரத்தை பறிக்கவே நாம் முயற்சிகளை எடுப்பதாக கூறுகின்றனர்.

அன்று நாம் யுத்தத்தை முடிக்க முன்வந்தது தமிழர்களை பாதுகாக்கவே. வடக்கு கிழக்கு பகுதிகளும் நாட்டின் ஏனைய பகுதிகளை போல் மாற்றி அபிவிருத்தியின் பாதையில் கொண்டு சென்றதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ஞா)


அத கோடிபதி

சீட்டிழுப்பு இல: 725 வர்ணம் : பச்சை

சீட்டிழுப்பு திகதி: 2019.09.08

விசேட இலக்கம் 8042

வெற்றி இலக்கங்கள் 21 27 43 51 — ஆங்கில எழுத்து G

தொலைபேசி: 0112 333 546-47

கொட்டிபதி கப்ருக

சீட்டிழுப்பு வாரம்: 492 — திகதி 08 செப் 2019 — வர்ணம் மஞ்சள்

A 33 37 56 65

வாசி தகை 67228

அடுத்த சுப்பர் ஜக்பொட் 139, 237, 458/=

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

தானியங்கி குரல் பதிவுக்கு 0114 825 825 ஐ அழையுங்கள்.

டிக்கட் விநியோகத்திற்கான உடனடி அழைப்பு 011 4 062 002 / 077 105 4894

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1037

சீட்டிழுப்பு திகதி 08.09.2019 சிவப்பு

C 01 40 49 62

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ- 74,542,760/=

ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

தானியங்கி குரல் பதிவுக்கு 0114 825 825 ஐ அழையுங்கள்.

டிக்கட் விநியோகத்திற்கான உடனடி அழைப்பு 011 4 062 002 / 077 105 4894

ராசி அதிர்ஷ்டம்

திகதி 08/09/2019 — வெற்றி வாரம் 2611 — வர்ணம் ஊதா

விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 16 17 42 55

திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,555,624/=

2019/09/09ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919


## தொடர்புடையவர்...

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் மூன்றாவது மாநாடு நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

பாண் மற்றும் மாவின் விலையை அதிகரித்த அரசாங்கத்திற்கு பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனத்தை அதிகரிக்க இயலாது போயுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் அனைவரினதும் ஏகமனதான தீர்மானத்திற்கு அமைவாக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார்.

ஆகவே அவரது வெற்றிக்காக அனைவரும் இணைந்து பணியாற்றவுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ, தமது ஆட்சியின் ஊடாக அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவுள்ளதாக குறிப்பிட்டார்.

அத்துடன் பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்கான திடமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

உள்நாட்டு உற்பத்தியாளர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு முக்கியத்துமளித்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தை முன்னெடுத்து செல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி வேட்பாளராக தன்னை அங்கீகரித்தமைக்கு தான் அனைவருக்கும் நன்றி கூறுவதாகவும் எதிர்காலத்தில் நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்கும் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கும் மக்கள் தம்முடன் இணைந்து கொள்ள வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஞா)

## மாணவர் ஒன்றி...

றியத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கும் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையே நேற்று முன்தினம் மாலை ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. (ஞா)

## ரூ. 15 லட்சம்...

15 லட்சம் ரூபாய் வரையில் பிணை யின்றி இலகு கடன் வசதிகளை பெற்றுக் கொள்ள முடியுமென்று நிதியமைச்சர் மங் கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த இலகு கடனுக்காக வருடத்திற்கு 6.5 சதவீத வட்டி மாத்திரமே செலுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண மாவட்ட செயலகத் தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற் றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு கட்டமாக இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் சுயதொழில் முயற்சிகளுக்கான கடன்களைப் பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற சிக்கல்கள் மற்றும் அவர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான கடன் களைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் நிலவுமானால் அவற்றை அரச வங்கிகளுடன் இணைந்து எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பான விடயங்களிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## வட - கிழக்கு...

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில், நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு தொடர்ந்துரைத்த அவ்வியக்கத்தினர், தேசிய மக்கள் சக்தியால் நாட்டில் அனைத்து மக்களுக்குமான வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வரைபு ஜனாதிபதி தேர்தலுக்கு மட்டும் உருவாக்கவில்லையெனவும் இது இறுதியான வரைபல்ல எனவும் தெரிவித்தனர்.

நாட்டில், அனைத்து மாகாணங்களில் உள்ள மக்களுடன் பேசி அடிப்படை பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான திட்டங்களும் அந்த வரைபில் இணைத்துக் கொள்ளப்படுமெனத் தெரிவித்த அவர்கள், இறுதியாக முழுமையான திட்டமாக அது மாற்றப்படுமெனவும் கூறினர்.

அரசியலில் 3ஆவது பாதை தேவை என்பதை யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களும் ஏற்கின்றார்களெனத் தெரிவித்த அவர்கள், அதற்காக முற்போக்கு சிந்தனை உள்ள தமிழ் மக்கள் எங்களுடன் கைகோர்க்க வேண்டுமெனவும் கூறினர்.

காலிமுகத்திடலில் கூடிய கூட்டத்தைப் போன்று, யாழ்ப்பாணத்தில் மக்கள் அலை ஒன்றை திரட்ட உள்ளதாகத் தெரிவித்த அவர்கள், அதில் தமது ஜனாதிபதி வேட்பாளர் மக்கள் முன்தோன்றி பேசுவாரெனவும் அவருடனும் மக்கள் பேச முடியுமெனவும் கூறினர்.

தலைவர் பேசுவதை மக்கள் கேட்க வேண்டுமெனவும் அதேபோன்று மக்கள் பேசுவதை தலைவர் கேட்க வேண்டுமெனவும், அவர்கள் மேலும் கூறினர். (ஞா)

## வீட்டிலிருந்து...

அனலைதீவு 1ஆம் வட்டாரத்தினைச்சேர்ந்த சின்னத்தம்பி சின்னத்தங்கம் (வயது-75) என்ற வயோதிபப் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 4 நாட்களாக காணவில்லை என்று அவரது உறவினர்கள் தேடிவந்த நிலையில் நேற்று முன்தினம் அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பான மரணவிசாரணையை தீவக திடீர் மரண விசாரணை அதிகாரி நாகராஜா தியாகராஜா மேற்கொண்டார். (ஞா)

## குளத்தில் மூழ்கிய...

வத்தினர் மீட்டுள்ளனர்.

பூநகரி அரசபுரகுளத்தில் நேற்று தாயொருவர் தனது மூன்று குழந்தைகளுடன் குளிக்க சென்றுள்ளார். குளித்துக் கொண்டிருந்தபோது, அவர்கள் சேற்றுக்குழிக்குள் சிக்கி மூழ்கினர்.

குளத்தில் குளித்துக் கொண்டிருந்த இரண்டு இராணுவத்தினர் விரைந்து செயற்பட்டு, மூழ்கியவர்களை மீட்டனர்.

அலோசியஸ் ஜெயந்திமலா (44) அவரது மூத்த மகன் அலோசியஸ் அம்பராசா (14), இரண்டாவது மகன் அலோசியஸ் அனஸ்தான் (12) ஆகியோர் மீட்கப்பட்டனர். (ஞா)

## எழுக தமிழ்...

திரைப்பட நடிகர் சங்கத்தின் செயற்குழுப் பிரதானியும் சட்டமன்ற உறுப்பினருமான நடிகர் கருணாஸ் நேற்றைய தினம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொங்குதமிழ் நிகழ்வுகள் தமிழ் மக்களை உணர்வு ரீதியாக பெரும் எழுச்சியைப் பெற வைத்ததென்பது நினைவில் கொள்ளத்தக்கது. அதேபோன்ற வகையில் ஓர் இன எழுச்சியின் அறவழியின் செயற்களமாய் புதிய வடிவம் பெற்று எழுக தமிழ் பேரணி எழுச்சி கொள்வது பாராட்டுக்குரியது. வரவேற்புக்குரியது.

உலகில் ஒவ்வொரு தேசிய 04

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

V2 TRAVELS (C-7519)

## V2 TRAVELS




வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)

0768227499

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-7320)

## கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

## கனரக வாகன (AD License) சாரதிகளுக்கு

சவுதி அரேபிய அரசாங்க அரம்கோ வேலைத்திட்டத்தில்

வேலைவாய்ப்புக்கள் 300 பேர்

பக்கோ லோடர் - கிறேன் - ஃபோக்லிஃப்ட் ஒப்பறேட்டர், A/C டெக்னீஷியன், மெக்கானிக், வெல்டர், ரயர் ஃபிற்றர், பெயின்ரர், வேலைவாய்ப்புக்களும் உண்டு...

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

077 00 38 215
077 55 46 956
021 221 9 221

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம். The Lover/Teen Girls க்கு அருகே

email: jaffna@emeraldisle.lk www.emeraldisle.lk (C-7551)

## வேலையாள் தேவை

K.K.S வீதி, தட்டாதெருவில் அமைந்துள்ள அசைவ உணவ கத்திற்கு வேலையாட்கள் தேவை.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- ரொட்டி தயாரிப்பவர் (கொத்து)
- கணக்காளர் (பகுதி நேரம் - ஆண்)
- கணக்காளர் (முழுநேரம் - பெண்)
- தங்குமிட வசதி உண்டு

உடன் தொடர்பு கொள்ளவும் :
077 247 3676 (130)

## துரித தபால்கள் பொதிகள் சேவை

DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள்
3 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528 (C-7109)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9776)

## SB travels and tours pvt ltd

இல. 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். இந்தியா வீசா விண்ணப்பப்படிவம் 100/- ற்கு நிரப்பித்தரப்படும்.மற்றும் நம் நிறுவனத்தின் ஊடாகவும் இந்தியா வீசாவினைப் பெற்றுக் கொள்ளலாம்.

சென்னைக்கு 23,200/-, திருச்சி 30,500/- இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

Schengan வீசா விண்ணப்பப்படிவம் நிரப்பித் தரப்படும். (C-7545)

தொடர்புகளுக்கு - 021 222 9555, 222 8555
கொழும்பு 15 - 0112540111 / கொழும்பு 6 - 0112361711

## A.R.K. MOBILE SHOP

Mobile Phones | Repairing | Mobile Cards | Reloads | Photocopy | Lamination

Arasady Road, Jaffna. 021 221 6465

### இட மாற்றம்

02.09.2019 தொடக்கம் எமது **A.R.K.MOBILE SHOP** ஆனது அரசடி வீதி, பிறவுண் றோட் சந்தி, யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் இயங்குகிறது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.



A.Ramana 077 923 3380 (C-7548)


# மரண அறிவித்தல்

## திருமதி ஈஸ்வரி பஞ்சாட்சரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை – உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி ஈஸ்வரி பஞ்சாட்சரம் (07.09.2019) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்லமாப்பிரபு - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆசிரியமணி அருணாசலம் பஞ்சாட்சரத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆருயிர் மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமசாமி.

இரத்தினம் மற்றும் நித்தியானந்தன், சீதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாசுகி (அதிபர், உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்), சிவகலை (முன்னாள் ஆசிரியை, யாழ்.இராமநாதன் கல்லூரி), கணேசன் (கோட்டக் கல்விப்பணிப்பாளர் - சண்டிலிப்பாய்), அம்பிகை (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மன்மதராசா (ஆசிரியர் - யாழ்.நவாலி மகாவித்தியாலயம்), கிருபாகரன் (ஓய்வுபெற்ற மாவட்ட விளையாட்டு அதிகாரி, கல்வி கலாசார பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு - வடக்கு கிழக்கு மாகாணம்), அகல்யா (ஆசிரியை - ஊரெழு கணேசா வித்தியாலயம்), சுரேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, சிவப்பிரகாசம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் புராதனி, அபிலக்ஷன், விபூசன், வைசிகன், நிகேசிகா, விஷ்ணு, மீனாட்சி, தீர்த்தன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2019) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
ஒஸ்காலேன் அருகாமை
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (128)

தகவல் :
குடும்பத்தினர்
076 578 7488


## ICOF - வளர்பிறை உளவளத்துணை நிலையம்

Since - 1994 Reg.No J/DS/SS/NGO/31

### உளவள சிகிச்சைப் பயிற்சி நெறி
(Psychotherapy Training Program)

வளர்பிறை உளவளத்துணை நிலையத்தின் புலமை வாய்ந்த வளவாளர்களினால் உளவள சிகிச்சைப் பயிற்சி நெறி 14.09.2019 அன்று எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சிக்காலம் :- 100 மணித்தியாலங்கள், பிரதி சனி, ஞாயிறு (9.00 – 1.00)
- பயிற்சியின் பின்னர் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளக் கூடிய கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கல்வித்தகைமை :- உளசமூகத் துறையுடன் தொடர்புடையவர்கள்
- **விண்ணப்ப முடிவு :- 13.09.2019**
- தகுதியானவர்கள் தமது பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
- அனுமதிக் கட்டணம் :- 2000.00

➢ NLP
➢ Speech therapy
➢ CBT
➢ REBT
➢ Gestalt Therapy

வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)
இல. 05, பிளச்சஸ் லேன்,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (116)

தொடர்புகளுக்கு - 077 266 0209 / 021 222 8238

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536 (C-7533)

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.